பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 வைகாசி 20 ஜ: ஆகிர்: 14 இதழ்: 11
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 2-6-7

## ஆயுள்வேத மாணவர்களின்

# சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

## நிர்வாக அதிகாரி ராஜினாமாச் செய்தார்

யாழ்ப்பாணம், வியாழன் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியர் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்டிருந்த சாகும்வரை உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

தமது கோரிக்கை வெற்றியளித்ததைத் தொடர்ந்து சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த பிரஸ்தாப கல்லூரியைச் சேர்ந்த ஏழு மாணவர்களும் தாம் மேற்கொண்ட சாகும்வரை உண்ணா

(8-ம் பக்கம் பார்க்க)

## ரயில்வே ஊழியர் விவகாரம்

# காபந்து அரசால் பெருந்தொகை செலவிட முடியாது

## சேவையை சீர்படுத்த முன்வருமாறு அரசு ஊழியருக்கு வேண்டுகோள்

கொழும்பு, புதன்

**காபந்து அரசாங்கம் ஒன்றினால் மிகப் பெருந்தொகையான 100 கோடி ரூபாவை செலவிடமுடியாது என்று ரயில்வே ஊழியர்களின் சட்டப்படி வேலை தொடர்பாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.**

ரயில்வே ஊழியரின் சட்டப்படி வேலை சம்பந்தமாக அரசாங்கம் இது தொழிற்சங்க நடவடிக்கையா அல்லது பொதுத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டதா என சந்தேகம் தெரிவித்துள்ளது.

தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டு தற்போது உள்ள காபந்து அரசாங்கம் ரயில்வே ஊழியர் கோரிக்கைகளை நிறைவேற்றுவதாயிருந்தால் 100 கோடி ரூபா செலவிட வேண்டும். காபந்து அரசாங்கத்தி

(8ம் பக்கம் பார்க்க)

## பலத்த வரவேற்பு மத்தியில்

# இராஜலிங்கம் பிரசாரத்தை ஆரம்பித்தார்!

நெல்லியடி, புதன்

'தமிழர் விடுதலைக் கூட்டணி' சார்பில் உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிடும் திரு த. இராஜலிங்கம், பலத்த வரவேற்புகளுக்கு மத்தியில் தனது பிரசாரத்தை நேற்று ஆரம்பித்தார். பிரசார வைபவம் ஒரு திருவிழாவாகவே அமைந்திருந்தது.

திரு. த. இராஜலிங்கத்தின் பிரசார ஆரம்பத்தில், திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், எஸ். கதிரவேலுப்பிள்ளை, இளைஞர் பேரவை உறுப்பினர்கள், உடுப்பிட்டி வட்டார ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டதுடன் அவரை மாலை சூடி வரவேற்றனர்.

நேற்றைய பிரசார ஆரம்பத்தில் கலந்துகொண்ட திருவாளர் அ. அமிர்தலிங்கம், எஸ். கதிரவேலுப்பிள்ளை இளைஞர் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் தமது முழுநேரத்தையும் உடுப்பிட்டித் தொகுதியில் செலவிட்டனர்.

இத்தொகுதியில் எந்தவிதமான இடையூறுகள் சில்லறைப் பிரச்னைகள் ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் சமாளித்து திரு. இராஜலிங்கத்தை மகத்தான வெற்றிபெற வைத்து, கூட்டணியின் இலட்சியத்தைக் காப்பாற்றியே தீருவோம்' என இளைஞர் பேரவை உறுப்பினர்கள் இவ்வாரம்ப வைபவத்தில் உறுதி எடுத்தனர். இன்றைய பிரசார வைபவத்தில் கலந்துகொண்ட ஆசிரியர்களும் தங்களின் முழு ஆதரவை அளித்தனர்.

திரு த. இராஜலிங்கத்தின் தேர்தல் கட்டுப் பணத்தைச் செலுத்த தமிழ் இளைஞர் பேரவையின் உடுப்பிட்டி மத்திய கமிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டித்துறைக் கிளைகள் உடுப்பிட்டி வட்டார ஆசிரியர் ஒன்றியம், அல்வாய் மனோகரா சன சமூக நிலையம் ஆகியன முன்வந்தபோதிலும தமிழ் இளைஞர் பேரவையின் தொண்டமானாறுக்கிளையினரே இவரது கட்டுப்பணத்தை நாளை வியாழக்கிழமை யாழ். கச்சேரியில் செலுத்துவார்கள்.

# "தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ்" உதயம்

## ஜி. ஜி. படத்துடன் நான்கு வர்ணக் கொடி தமிழ் ஈழம் பெறுவதே இலட்சியம்!

யாழ்ப்பாணம், வியா

'தமிழ்ஈழ ஜி. ஜி. காங்கிரஸ்' என்ற பெயரில் இயங்கி 'தமிழ் ஈழம்' பெறுவதற்கான சகல முயற்சிகளையும் கையாள்வதென நேற்று மாலை கோண்டாவிலில் கூடிய காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஏகமனதாக தீர்மானித்துள்ளனர். நான்கு வர்ணக் கொடியின் நடுவில் ஜி. ஜி. யின்படத்தைப்பொறித்து ஜி. ஜி. காங்கிரசின் கொடியாக பாவிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

கோண்டாவிலில் நேற்றுத் திறக்கப்பட்ட ஜி. ஜி. காங்கிரஸ் தலைமைக்காரியாலயத்தில் காங்கிரஸ் ஸ்தாபக உறுப்பினர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நேற்றுக் கூடிய காங்கிரஸ் ஆதரவாளர் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

'தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ்' என்ற பெயரில் இயங்க வேண்டுமென்ற தீர்மானத்தை மானிப்பாய் ஜி. ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. சி. முதலியார் பிரேரிக்க, நல்லூர் வேட்பாளர் திரு. க. இராமநாதன் அனுவதித்தார்.

நான்குவர்ண கொடியில் ஜி. ஜி. யின் படத்தை நடுவில் பொறித்து ஜி. ஜி. காங்கிரசின் கொடியாக பாவிக்க வேண்டும் என்ற பிரேரணையை சாவகச்சேரி வேட்பாளர் திரு. வி. குமாரசாமி பிரேரிக்க கோப்பாய் அபேட்சகர் திரு. ரி. பரமானந்தராசா அனுவதித்தார்.

### தலைமைக்காரியாலயம்

'தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ்' தலைமைக்காரியாலயத்தை திரு. வி. குமாரசாமி குத்துவிளக்கேற்றி திறந்துவைத்தார். அமரர் ஜி. ஜி. யின் உருவப்படத்தை திரு. ஆர். என். சிவப்பிரகாசம் திரைநீக்கம் செய்துவைத்தார்.

### ஜி.ஜி.க்குமணிமண்டபம்

அமரர் ஜி. ஜி. க்கு யாழ்ப்பாணத்தில் மணிமண்டபம் அமைப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டது. மணி மண்டபம் நிறுவ உடன்நடவடிக்கை எடுப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அமரர் ஜி. ஜி. யின் மறைவுக்கு கூட்ட ஆரம்பத்தில் 2நிமிடமௌன அஞ்சலி செய்யப்பட்டது. (சு)

## ஈழநாடு செய்தி

### ஊர்ஜிதம்

யாழ்ப்பாணம், வியா.

தமிழ் ஈழ ஜி. ஜி. காங்கிரஸ் தலைவராக திரு. ஆர். என். சிவப்பிரகாசம் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். இணைச்செயலாளராக திரு. சி. பொ. வ. மா. க. முதலியாரும் திரு. வி. சிவபாலசிங்கமும், பொருளாளராக திரு. க. இராமநாதனும், தொகுதிவாரியாக 10 பேர் கமிட்டி உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சோண்டாவிலுள்ள தமிழ் ஈழகாங்கிரஸ் காரியாலயத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

### பஸ் சேவை

யாழ்ப்பாணம், வியா.

புகையிரப் பகுதி ஊழியர்களின் சட்டப்படி வேலையை அடுத்து கொழும்பு இ. போ. ச. டிப்போ யாழ் கொழும்பு பஸ்சேவையை தற்போது நடத்திவருகிறது.

# 'எந்தக்கமிஷனையும்சந்திக்க தி.மு.க. தயார்' கலைஞர் கருணாநிதி பேச்சு

பாண்டிச்சேரி, ஜூன். 1

''திராவிட முன்னேற்றக்கழகம் தனக்கு எதிரான எந்த கமிஷனையும் எதிர்நோக்கத் தயாராக இருக்கிறது'' என்று தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பாண்டிச்சேரியில் நடைபெற்ற தேர்தல்பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

''திராவிட முன்னேற்றக்கழகத்தினால் மட்டுமே தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் நிலையான ஆட்சியை நடத்த முடியும்'' என்றுகலைஞர்கருணாநிதி இத்தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

பாண்டிச்சேரியில் முன்னரும் நிலையான ஆட்சியைநடத்தியது தி. மு. க. தான்என்றும் கலைஞர் சொன்னார்.

''ஜனதா கட்சியுடன் தேர்தல் உடன்பாடு ஏற்படாமல் போனதற்கு தி. மு. க. பொறுப்பல்ல'' என்றார் அவர். (உ)

## அறிவித்தல்

'ஈழநாடு' பத்திரிகையின் உதவி ஆசிரியராகவும், பின்னர் பத்திரிகை விற்பனைப் பகுதி விசேஷப் பிரதிநிதியாகவும் கடமையாற்றிய திரு. எஸ். கே. காசிலிங்கம் அரசாங்க துறையில் பதவி ஏற்று செல்வதால் மேற்படி பதவியிலிருந்து 24,5-1977 திகதியுடன் விலகிக்கொண்டுள்ளார் என்பதனையும் இத்திகதியிலிருந்து அவர் எமது ஸ்தாபனத்தின் சார்பில் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் செய்து கொள்ளமாட்டார் என்பதையும் அவைகளுக்குப் பொறுப்பாய் இருக்கமாட்டார் என்பதையும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகி,
ஈழநாடு லிமிட்டெட்,
63, சிவன்கோயில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.

## உத்தேச வேலைநிறுத்தம்

# டாக்டர்களுக்கு அமைச்சர் கோரிக்கை

கொழும்பு, புதன்

நாளை அரசாங்க அதிகாரிகள் சங்கமும், வைத்திய நிபுணர்கள் சங்கமும் நடத்தவுள்ள உத்தேச வேலைநிறுத்தத்தைக் கைவிடுமாறு சுகாதார அமைச்சர் திருமதி சிவா ஒபயசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இன்று நிருபர்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் மேற்படி வேண்டுகோளை விடுத்தார். [உ]

## வரி விளம்பரம்

### தேவை

காஸ் வெல்டிங்', கம்மாலை வேலை, லேத்வேலை தெரிந்தவர்களும் மேற்பார்வையாளர்களும் தேவை. எழுதிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 6336

### வகுப்புகள்

H.N.C.E, N.C.G.E. A/L ரியூசன் வகுப்புகள் 5-6-77இல் புதிய முதலாண்டு வகுப்புகள் ஆரம்பமாகும். கில்னர் மண்டபம் மெதடிஸ்ற் இன்ஸ்ரிரியூட், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். மாணவிகளுக்கு தனிவகுப்பு ஒழுங்கு செய்யப்படும். பதிவு செய்தல் மாலை 3-30—6-00 மணி வரை. 6333

### ஏலவிற்பனை

புத்தம் புதிய 'யன்மார்'(9) ஒன்பது குதிரைச் சக்தி கொண்ட டீசல் இயந்திரம் உடனடியாகவிற்பனைக்குண்டு. அரிசி ஆலைக்கும், மின்சார ஒளியேற்றவும் பாவிக்கமுடியும். ரூபா 50/- வைப்புப் பணத்துடன் தொடர்பு கொள்ள. ரூ. 5/- மீளளிக்கப்படாத பணம் செலுத்தி கேள்விப்பத்திரத்தை பெற்றவர்களே விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 10-06-1977.

பொதுமுகாமையாளர்,
பூ. ப. நோ. கூ. சங்கம்,
6332 பூநகரி.

---

புதிய
சுற்றுடற் கல்விப்
பாடத்திட்டத்திற்கு
எழுதப்பெற்ற

**நாமும்**
**நமது சூழலும்**
**3-ஆம் வகுப்பு**
1977ஆம் ஆண்டு பதிப்பு
**விலை: ரூ. 4-50**

**சுன்னுகம்**
**தனலக்குமி**
புத்தகசாலை.

---

### டிறிபேக் கல்லூரி
### சாவகச்சேரி

பழைய மாணவர் சங்க வருடாந்தக் கூட்டம் 18-6-77 சனிக்கிழமை பின் போடப்பட்டுள்ளது.

பொ. தேவேந்திரன்
6340 செயலாளர்.

---

### சுன்னுகம்
### பல. நோ. கூ.
### சங்கம்
### (வரையுள்ளது)
### சுன்னுகம்.

## அறிவித்தல்

3-6-1977 வெள்ளிக்கிழமை சுன்னுகம் பல. நோ. கூ. சங்க தலைமைக்காரியாலயக் கட்டடத்தில் திறக்கப்படவிருக்கும் மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் மோட்டார் உதிரிப்பாகங்கள், நீரிறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள் கட்டுப்பாட்டு விலைக்கு பெற்றுக்கொள்ளலாம் என்பதை பாவனையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சுன்னுகம் பல. நோ. கூ.
சுன்னுகம்.
31-5-1977. 6335

---

## கத்திக்குத்து: இருவர் காயம்

வேலணை, புதன்

காரைநகரில் தோப்புக்காட்டில் நால்வருக்கிடையில் ஏற்பட்ட சச்சரவைத் தொடர்ந்து இருவர் கத்தியால் குத்தப்பட்டு ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கத்திக்குத்து சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டு 250 ரூபா பிணையில் விடப்பட்டிருக்கின்றனர்.

---

## நீதிவிசாரணை

சென்னை, ஜூன் 1

சென்னை நகர காவல்நிலையம் ஒன்றில் ஜனதாகட்சி ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டது குறித்து நீதிவிசாரணை நடைபெறும் என இந்திய அரசு உத்தரவிட்டது. (கெ)

---

'ஹோமியோபதி

## மருந்து இறக்குமதி செய்ய சங்கத்திற்கு அனுமதி தருக'

யாழ்ப்பாணம், வியாழன்

ஹோமியோபதி டாக்டர்கள் தனிப்பட்ட முறையில் ஹோமியோபதி செய்வதில்ஏற்படும் கஷ்டங்களை நீக்குமாறு கோரி வட இலங்கை ஹோமியோபதிசங்கத்தலைவர் திரு அ. கிருஷ்ணசாமி வர்த்தக அமைச்சையும் சுகாதார அமைச்சையும் மகஜர் மூலம் கோரியுள்ளார்.

வருங்காலத்தில் தனிப்பட்ட டாக்டர்களுக்கு இறக்குமதி அத்தாட்சிப் பத்திரம் வழங்குவதற்குப் பதிலாக முன்போல் சங்கத்திற்கு கணிசமான தொகைக்கு இறக்குமதி அத்தாட்சிப் பத்திரம் வழங்குமாறு சங்கம் தான கோரியுள்ளது. இவ்வாறு வழங்குவதால் தனிப்பட்ட ஹோமியோபதி டாக்டர்களுடைய கஷ்டங்களைப் போக்குவதுடன் அவர்களது தேவையான மருந்துவகைகளை நியாயமானவிலையில் பெறமுடியுமென மகஜரில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (கெ-அ)

---

## மாருதியில் சோதனை

புதுடெல்கி, ஜூன் 1

சஞ்சய் காந்தியின் சொந்தக் கம்பனியான மாருதி டெக்னிக்கல் சர்வீஸ், மாருதி ஹெவி வெஹிக்கில்ஸ், மாருதிலிமிரெட் ஆகிய நிறுவனங்களில் நடந்துள்ளன ஊழல்களைப்பற்றி மத்தியபுலனாய்வு துறை சி. பி. ஐ. அதிகாரிகள் சோதனை நடாத்தியுள்ளனராம் டில்கி, அரியானு, கல்கத்தா, ஆமதாபாரத் ஆகிய இடங்களிலுள்ள மாருதி கம்பனிகளில் ஒரே நேரத்தில் இச் சோதனை நடைபெற்றன. (இ)

---

## அரியாலை காந்தி ச. ச. நிலையம்

அரியாலை, புதன்

அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையத்தின் வருடாந்தக் கூட்டம் நிலையத்தலைவர் திரு.எஸ்.பீ. ஜீவானந்தம் தலைமையில் காந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: திரு. த. இராமலிங்கம், உபதலைவர்: திரு. வ. சின்னப்பு, செயலாளர்: திரு. எஸ். பி. ஜீவானந்தம், உபசெயலாளர்: திரு. க. தருமகுலசிங்கம், பொருளாளர்: திரு. ஆ. செல்வநாதன், பத்து நிர்வாகசபை உறுப்பினர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். காப்பாளராக இளைப்பாறிய அதிபர் திரு. சி. தருமலிங்கமும், எண்பார்வையாளராக திரு. நா. தர்மலிங்கம் ஜே.பி. யும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

---

## மாடுகளுடன் இருவர் பிடிபட்டனர்

வேலணை, புதன்

களவாக மாடு பிடித்து விற்க முயன்ற இருவரை ஊர்காவற்றுறை பொலிசார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் புளியங்கூடல் சந்திக்குச் சமீபமாக நடந்தது.

மாடுகளைப் பிடித்துக் கொண்டு அதிகாலை 5 மணியளவில் வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் மீது சந்தேகம்கொண்டு ரோந்து சுற்றிவந்த பொலிசார் அவர்களிடம் வரவே இருவரும் மாடுகளை விட்டுவிட்டு ஓடவே பொலிசார் அவர்களைத் துரத்திப்பிடித்து மாடுகளுடன் அவர்கள் இருவரையும் பொலிஸ்நிலையத்தில் ஆஜர் செய்தனர்.

தற்பொழுது மாடுகள் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. இருவரும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (அ)

---

## மண்எண்ணெய் தட்டுப்பாடு

சங்கானை, புதன்

கடந்த சில நாட்களாக வலி-மேற்குப் பிரிவில் சங்கானை, சண்டிலிப்பாய், பண்டத்தரிப்பு வடலியடைப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம், தொல்புரம் மூளாய், அராலி ஆகிய இடங்களில் மண்எண்ணெய்த் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இதனுல் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அடிக்கடி இப்படியான தட்டுப்பாடு ஏற்பட்டு தாம் பாதிப்படைவது பற்றியும் இதிலிருந்து விடுபடுவதற்கு வழிவகை செய்துதரும்படியும் இப் பகுதி விவசாயிகள் உதவி அரசாங்க அதிபர் திரு. சோ. அருணுசலத்திடமும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளிடமும் புகார் செய்துள்ளனர்.

---

## மீண்டும் ராஜதந்திர உறவு

வாஷிங்டன், ஜூன் 1

அமெரிக்காவுக்கும் கியூபாவுக்குமிடையே மீண்டும் ராஜதந்திர உறவுகள் ஏற்பட இருக்கின்றன.

இதுசம்பந்தமாக அமெரிக்க அதிபர் கார்ட்டர் கியூபா பிரதமர் பிடல் காஸ்ட்ரோவு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

---

25,000 குடும்பங்களுக்கு

# உலக உணவுத் திட்டம்

கொழும்பு, புதன்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 25,000 குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவிகள் கிடைக்கவிருக்கின்றன.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அப்பகுதிகளில் குடியேறும் குடும்பங்களுக்கு உலகஉணவுத் திட்டத்தின்கீழ் கோதுமை, தானியம், கருவாடு, சீனி ஆகியவை கிடைக்கின்றன. 1975-ம் ஆண்டு முதல் 1977 வரை 25 கோடியே 50 லட்சம் ரூபா, பெறுமதியான உதவிகள் வழங் கப் பட் டுள் ளன. 75—76 ஆண்டுப் பகுதியில்மட்டும்மகாவலிப்பிரதேசத்தில்குடியேறிய 2,200 குடும்பங்கள் இந்த உதவியைப் பெற்றுள்ளன. இவ்வருடம் 4 கோடியே 30 சட்சம் ரூபா உதவிகள் வழங்கப்படும். உலக உணவுத் திட்டத்தின்கீழ் மொத்தம் 48 கோடியே 90 லட்சம் ரூபா உதவி கிடைக்கவிருக்கிறது.

---

## "காலத்துக்குக் காலம் போராட்டம் வேறுபட்டிருக்கும்"

யாழ்ப்பாணம், வியாழன்

விடுதலை இயக்கங்கள் காலத்துக்குக்காலம் பலவகையான போராட்டங்களை நடாத்துகின்றன. ஆனுல் அவை ஒரே முறையில் வாழ்நாள் பூராவும் நடைபெற வேண்டியதில்லையென ஊர்காவற்றுறைத் தொகுதித் தமிழ் இளைஞர் பேரவைத்தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் புளியங்கூடல் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரசாரக்கூட்டத்தில்குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; தமிழரசுக்கட்சியினுல் நடாத்தப்பட்ட சிங்கள சிறிஎதிர்ப்பு போராட்டம்,மறியல்போராட்டம், சத்தியாக்கிரகம் அனைத்தும் காலத்துக்குக்காலம் தற்காப்பு நடவடிக்கையாக அன்றைய சூழ்நிலையில் நடைபெற்றன. காந்திஜிகூட, உப்புப் போராட்டத்தை வாழ்நாள் பூராக செய்யவில்லை. இன்று நாம்எமதுஇனத்தின் விடுதலைக்காக ஜீவமரணப் போராட்டம் நடாத்துகின்றோம். இத்தேர்தல் எமது தலைவிதியை நிர்ணயிக்கின்ற தேர்தல் மட்டுமல்ல, உலகநாடுகளில்கூட தமிழ்தேசிய இனத்தை ஒரு இனமாககணிக்கச் செய்கின்ற தேர்தல்".

விடுதலைக்கூட்டணி வேட்பாளர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேசுகையில் 'இன்று தமிழ்பேசும் மக்கள் சேவைஅடிப்படையில் போராடாமல் இனவிடுதலையென்ற ஒரு நோக்கை வைத்தே போராடுகின்ருன். இனம் விடுதலை பெற்ருல் தான், ஒரு நாட்டை உருவாக்கினுல்தான் எமது வாழ்வை நிலைப்படுத்தலாம். இத்தேர்தலின் மூலமே, எமது நிலையை உலகுக்கு உணர்த்தி, எமது தாய்த்திருநாட்டை மீட்க வழிஅமைக்க வேண்டும். இனஒற்றுமையை உலகறியச்செய்து எமது பிரச்னையைத்தீர்க்க அயராது உழைப்போம்'' என்ருர்.

இக்கூட்டத்தில் இளைஞர் பேரவை உறுப்பினர்களும், வர்த்தகப்பிரமுகர்களும் உரையாற்றினர்.

திரு. சி. நாகராஜா தலைமை வகித்தார். (கெ அ)

---

## கொந்தளிப்பு ஏற்படலாம்

லண்டன், ஜூன் 1

மொஸாம்பிக்கில் ரொடீஷியா துருப்புகள் ஊடுருவல் செய்ததை அமெரிக்காவும், பிரிட்டனும் வன்மையாகக்கண்டித்துள்ளன.

இந்தவன்முறைச் செயல் மூலம் ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்பு பெரும் பிரச்னையை உருவாக்கலாம் என்று இரண்டு நாடுகளும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

---

## ஜே. பி. யாக சத்தியப்பிரமாணம்

அரியாலை, புதன்

யாழ்ப்பாண மாவட்ட நீதிநிர்வாக சமாதான நீதவாகு சுன்னுகம் டாக்டர் சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த வைத்தியகலாநிதி ஜி.ஜோர்ஜ் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எம்.டி. யேசுரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். (அ)

---

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

---

### ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ. இல. ஈடு/12112

யாழ்ப்பாணம் நல்லூர்.
1. செல்லத்துரை செல்லையாவும்
2. மனைவி தங்கச்சியம்மாவும்

வழக்காளிகள்

எதிராக
கோப்பாய் இருபாலை முனிகோவிலடி
செல்லப்பா செல்லத்துரை

எதிராளி

ஈடு/12112-ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1977-ம் வருஷம் யூன் மாதம் 23-ந் திகதி (26-6-77) வியாழக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 5,045. மேலும் இதில் 3500/-ரூபாவுக்கு 26-10-70 தொடக்கம் 9-7-71 வரை வருடமொன்றுக்கு 10% வித வட்டியும், அதன்பின் சேர்ந்த முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு 5% வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 415-45 சதம். பவுண்டேச் மற்றும் விற்பனைக்குரிய சலார்களும். இதில் ரூபா 3650 கழித்து மிகுதி.

### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப்பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று இருபாலை இறை ''மன்னன்புலம்'' நிலபரப்பு 5, குளிகள் 3¼, பயிர்களும் வீடு கிணறும் இதன் எல்லைக் காணிகள் கிழக்கு வேலு மனைவி தங்கமுத்தும் மற்றவர்களும் வடக்கு ஒழுங்கை, மேற்கு தம்பிப்பிள்ளை சரவணமுத்தும் பங்காளரும், வயித்திலிங்கம் சண்முகமும் தெற்கு வயித்திலிங்கம் சண்முகம் பதிவு K 254/56.

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏலவிற்பனவாளர்.

''இராசகிரி'',
643, காங்கேசன்துறை வீதி.
யாழ்ப்பாணம். 6337

# "கலப்பு அரசாங்கம் என்ற பேச்சுக்கு இடமில்லை!

## ஜனதாஅலை மிக வேகமாக வீசுகிறது"

— பாரதப் பிரதமர்

லக்னோ, ஜூன். 1

மாநிலங்களில் மற்றைய கட்சிகளுடன் சேர்ந்து கலப்பு அரசாங்கங்களைஜனதாகட்சிஅமைக்காது என்று பாரதப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இங்குகூறினார்.



இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பிரதமர் பேசுகையில் மாநிலங்களில் "ஜனதா கட்சி தனித்துநின்றே அரசாங்கம் அமைக்கும். தவறும்பட்சத்தில் தனித்து எதிர்த்துநிற்கும். மற்றையகட்சிகளுடன்சேர்ந்து கலப்பு அரசாங்கங்களை அமைப்பதில் ஜனதாகட்சி ஈடுபடாது இப்படியான பேச்சுக்கு இடமே இல்லை" என்று கூறினார்

இக்கூட்டத்தின் பின்னர் நிருபர்கள் கூட்டத்தில் அவர் பேசினார். ஜனதாஅலை ஓய்ந்து விட்டதாகக் கூறப்பட்டுகிறதே என்று நிருபர்கல கேட்டதற்கு "அது வெறும்கற்பனை ஜனதா அலை முன்னரை விட வேகமாக வீசுகிறது. எதிர்வரும் சட்ட சபைத்தேர்தல்களில் ஜனதா கட்சிக்கு பெரும் வெற்றி கிடைக்குமென்று நம்பிக்கை தெரிவித்தார்.

"ஏழ்மை வறுமை, நமது நாட்டிலிருந்து இன்னும் ஒழியவில்லை. இதற்கு எமது பொருளாதாரத்திட்டங்கள் சரியில்லாததே காரணம். அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் புதிய அணுகு முறைகளைக் கையாளவேண்டும்" என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

நிர்வாகத்திலும், சமூகத்திலும் ஊழலை ஒழிக்க அரசாங்கம் புதிய திட்டங்களை விரைவில் கைக்கொள்ளும் என்று கூறிய பிரதமர், விலைவாசிகள் உயர்வுக்கு காங்கிரஸின் முறைகேடான நிர்வாகமே காரணமென்றும் தெரிவித்தார்.

# 'வாசல் எங்கும் இரட்டை இலை"

சென்னை, ஜூன் 1

அரசியல் கட்சிகளுக்கு வானொலியில் இடமளிக்கும் திட்டம் இப்பொழுது முதல்தடவையாக அமுல்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் தி. மு. கழகமும், நேற்று அ. இ அ தி. மு. கழகமும் வானொலியில் கலந்து கொண்டன. தி மு கழக சார்பில் பொதுச்செயலாளர் திரு. அன்பழகனும் அ இ. அ. தி.மு. கழகசார்பில் எம். ஜி. ராமச்சந்திரனும் கலந்து கொண்டனர்

பதினைந்து நிமிடநேரம் வரை ஒதுக்கப்பட்ட வானொலிஉரையில், தத்தமது கட்சிகளின் கொள்கைத் திட்டங்களையும், ஆட்சிக்கு தாங்கள் வந்தால் மக்களுக்கு எவ்விதமாகச் சேவையாற்றுவோம் என்பதையும் விளக்கினார்கள்.

நேற்று இரவு அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகம் சார்பில் பொதுச் செயலாளர் எம். ஜி. ராமச்சந்திரன் பத்து நிமிடங்கள் வானொலியில் உரை நிகழ்த்தினார். இதனைத்தொடர்ந்து கவர்ச்சிகரமான மற்றுமொரு நிகழ்ச்சியையும் அ இ. அ. தி. மு கழகம் தனது வானொலித் தேர்தல் பிரசாரத்தில் புகுத்தியிருந்தது. எம் ஜி ஆர். பேசி முடிந்ததும்:-

"வாசல் எங்கும் இரட்டைஇலை கோலம் இடுங்கள்...
காஞ்சி மன்னன் காலடியில் மாலையிடுங்கள்...
சந்தனத்தில் கண்ணுறங்கும் கண்ணின் மணியாம்
அவன் தம்பியர்க்கு வாக்களித்தல் உங்கள் பணியாம்...
அண்ணன் பெயர் தாங்கிநிற்கும் எங்கள்கழகம்
அதைஆதரித்து பார்த்திருக்கும் அன்னை உலகம்...
சீர்வரிசை தாங்கிவரும் செல்வமணிகாள் நீங்கள்
ஓர் வரிசை யாகவந்து முத்திரையிட்டு வாக்களிக்க
வேண்டும் அம்மா அக்கறைவைத்து...
இல்லை இல்லை என்று சொல்லும் ஏழ்மை மறைந்து
ஏழை மக்கள் வீட்டில் தீபம் எரிய...
கைகள் எல்லாம் வாடி நின்ற காலம் எல்லாம் போனதென்று பாட்டுச் சொல்லி கும்மியடிப்போம்..."

— இப்படியான பாடல் கணீரென ஒலித்தது!

## மொஸாம்பிக்கில்

# ரொடீஷிய துருப்புகள் முன்னேறுகின்றன!

லண்டன், ஜூன் 1

ரொடீஷிய துருப்புக்கள் மொஸாம்பிக்கில் முன்னேறுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று நடைபெற்ற தாக்குதல்களின் பின்னர், மொஸாம்பிக்கின் பட்டினமான மாபாய் எனுமிடத்தை ரொடீஷியத் துருப்புகள் கைப்பற்றிவிட்டதாகச் செய்திகள் தெரிவித்தன.

ரொடீஷிய துருப்புகளின் முன்னேற்றம் மின்னல் வேகத்தில் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டது.

## 11 கோடி ரூபாய் ஒதுக்கீடு!

புதுடில்லி, ஜூன் 1

இந்தியாவில் விரைவில் நிறைவேற்றப்படவிருக்கும் பன்னிரண்டு புதிய திட்டங்களுக்கு பதினொரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

காகித, சர்க்கரை, கம்பனி ஆலைகளை நிறுவுவது புதிய திட்டங்களில் இருக்கும் என்றும் இதன்மூலம் 2,500 பேருக்கு வேலை கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

# 'தவறு இழைத்தோர் தண்டிக்கப்படுவர்!' - எம்.ஜி.ஆர்.

சென்னை, ஜூன் 1

தவறு இழைத்தவர்கள் தண்டிக்கப்பட்டே தீரவேண்டும் என்று அ. இ. அ. தி. மு. கழகப் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று இங்கு நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

"அ இ. அ. தி. மு கழகம் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்தததும், தி. மு. க. தலைவர்கள் மீதான லஞ்சஊழல் குற்றச்சாட்டு சம்பந்தமான விசாரணைகளை உடனடியாக தொடங்கும் குற்றம்செய்தவர்கள் தப்பமுடியாது. தப்பினால் நல்லாட்சி மலரமுடியாது" என்று கூறிய திரு. எம். ஜி. ராமச்சந்திரன்; கருணாநிதி பற்றி இரா. நெடுஞ்செழியன் உண்மை பேசியிருப்பதுகுறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

### "பதவிமோகம் பிடித்து அலையவில்லை'

அ. இ. அ. தி. மு. கழகம் ஆட்சிககு வந்தால் மறைந்த அறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை கடைப்பிடிக்கும் என்று இக்கழகத்தின் பொதுச் செயலாளர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்றிரவு இங்கு நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்

"அனைத்திந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் பதவிமோகம் பிடித்து அலையவில்லை, அலையவும்மாட்டாது. அண்ணாவின் இலட்சியங்களைப் பெயரளவில் கடைப்பிடிக்காது உண்மைப்பற்றுடன் நாட்டு மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பான்மையுடன் எமது கழகம் கடைப்பிடிக்கும்" என்று கூறிய எம். ஜி. ஆர், "குற்றவாளிகளைக் கூண்டில் நிறுத்தியே தீருவோம்" என்றார்.

# "தாழ்த்தப்பட்டோருக்கு போராடியது தி.மு.க.தான்"

கலைஞர் மு. கருணாநிதி

சென்னை, ஜூன் 1

'தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய ஒரேகட்சி தி. மு. காவே தான். கல்வி நிலையங்களில் இருபத்தைந்து சதவீத இடம் மட்டுமே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனல்நாம் ஆட்சிக்கு வந்தபின் அதனை உயர்த்தினேம். இதற்கு மேலும் உயர்த்தி இருப்போம் ஆனல் அதற்கு அரசியல் சட்டம் இடம் தரவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 4000 ரூபா செலவில் 'கான்கிரீட்' விடுகளை அவர்கள் விரும்பிய இடங்களில் கட்டிக் கொடுத்தோம். கண்ஒளி இழந்த ஏழைமக்களுக்கு இலவசமாக சத்திரசிகிச்சை அளித்து கண்ஒளி வழங்கினேம். இதற்கான செலவு 150 ரூபாவையும் அரசே ஏற்று கொண்டது. இவ்வாருக எம்மாலான மட்டும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய ஒரே இயக்கம் தி. மு க.வே'

இவ்வாறு இங்கு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பேசுகையில் கூறினார். (கி)

## 100 மைல் வேக புயல்!

புதுடில்லி, ஜூன். 1

அஸாமில் நேற்று மணிக்கு நூறு மைல் வேகத்தில் புயல் வீசியது!

ஒரு வீட்டின் கூரை மீது மரம் விழுந்ததில் 9 வயதுச்சிறுமி, அந்த இடத்திலேயே மாண்டாள். வேறு நால்வர் படுகாயமடைந்தனர்.

## கைத்தொழில் நாடுகளுக்கு

# செல்வந்த நாடுகள் சலுகை காட்டவேண்டும்

### பாரிஸ் மகாநாட்டில் யோசனை

பாரிஸ், ஜூன் 1

இங்கு நடைபெற்றுவரும் வளர்முக கைத்தொழில் நாடுகளின் மகாநாட்டில் நல்ல அறிகுறிகள் காணப்படுகின்றன என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

வறிய நாடுகளுக்கு செல்வந்த நாடுகள் எவ்விதமாக உதவலாம் என்பது குறித்து நேற்று நீண்டநேரம் வரை ஆலோசிக்கப்பட்டது.

வறிய கைத்தொழில் நாடுகளுக்கு வளர்முக நாடுகள் சில சலுகைகளையும் காட்டவேண்டும் என்று நேற்றைய பேச்சுவார்த்தையின் போது வற்புறுத்தப்பட்டது.

மூன்ருவது உலக நாடுகளின் இறக்குமதி விஷயத்தில் விசேஷ சலுகைகள் காட்டப்பட வேண்டும் என்றும் யோசனை தெரிவிக்கப்பட்டது. கடந்த ஒருவாரமாக இங்கு நடைபெற்றுவரும் இம்மகாநாடு அடுத்த வாரம் முடிவடையும்.

# அமெரிக்க - பாக். உறவில் மாற்றம்

வாஷிங்டன், ஜூன். 1

பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே மீண்டும் நட்புறவு ஏற்படும்அறிகுறிகள் காணப்படுகின்றன.

நேற்று இருநாட்டுஅமைச்சர்களும் சந்தித்து முட்டுக்கட்டைகளைத் தீர்க்கும் பேச்சுக்களை நடத்தினர் என்று இங்கு அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கு பிரெஞ்சு அணுஉலை விற்பனை சம்பந்தமாக சுமுகமான முறையில் பேச்சுக்கள் நடந்ததாகவும் இருநாடுகளினதும் உறவுகளில் நல்ல மாற்றங்கள்ஏற்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கோவா தேர்தல்

புதுடில்லி, ஜூன் 1

கோவா, டமன், டியூ சட்டசபைத் தேர்தல் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது,

30 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையின் நான்காவது தேர்தல் இதுவாகும்.

சட்டசபையின் எல்லா தொகுதிகளிலும் ஜனதாகட்சி போட்டியிடுகிறது. காங்கிரஸ் கட்சி 27 தொகுதிகளில் போட்டியிடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட்கட்சியும் போட்டியிடுகிறது.

# எகிப்தில் 500 பேர் மீது முதல் விசாரணை!

கெய்ரோ, ஜூன் 1

கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக இங்கு இன்று 500 பேர் விசாரணை செய்யப்பட்டார்கள்.

எகிப்தில் கலவரம், கிளர்ச்சி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றத்துக்காக பல நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மீதான முதல் விசாரணை இன்று ஆரம்பமானது.

### மணிவாக்கு

நான் செய்த தவறுகள் சிறியன, ஏனையோர் செய்யுந் தவறுகளெல்லாம் பெரியன என்றிவ் வண்ணமாய்ச் சிந்திப்பவன், அறியாமையிருக்குள் மூழ்கியிருளுக்கிருன்.

—சாந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# விமோசனம் பிறக்குமா?

நமது பிரதான ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை—றப்பர் — தெங்கு பொருட்களுக்கு சமீபகாலமாக வெளிநா களில் நல்ல வரவேற்பு கிடைத்துவருகின்றது. அதனுல் இப்பொருள்களின் விலைகள் வெகுவாக அதிகரித்து நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி வருமானம் பெருகியுள்ளது. குறிப்பாக தேயிலை ஏற்றுமதி பல மடங்கு அபிவிருத்தியடைந்திருப்பதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் மூலம் கிடைக்கும் வருமானம் அதிகரித்திருக்கும் அளவுக்கு அந்த உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரம் ஒரு சிறிதளவேனும் அபிவிருத்தியடையவில்லையே என்பது தோட்டத்துறைகளில் செயல்பட்டுவரும் தொழிற் சங்கங்களின் பெரும் மனத்தாங்கலாகும். இது குறித்து அவர்கள் பகிரங்கமாகவே அரசைக் கண்டித்துவருகிறுர்கள்.

தோட்டங்களை வெளிநாட்டுக் கம்பனிகள் நடத்திவந்தகாலத்தில் தான் இந்த நிலைமையென்றுல் தோட்டங்களை அரசு பொறுப்பேற்றபின்னரும்கூட அதே நிலைமை நீடிப்பது கவலைக்குரியதுதான்.

ஆனல் பல ஆண்டுகாலமாக எதுவித மாற்றமுமின்றி — ஒரே நிலையில் இருந்துவந்துள்ள ஒரு துறையை நினைத்த மாத்திரத்தில் சீர்திருத்தி அமைப்பதென்பது சிரமசாத்தியமான காரியம், என்றுலும் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு போல் விளங்கும் ஒருதுறையில் ஈடுபட்டுள்ள — இதுவரை காலமும் புறக்கணிப்புக் குள்ளாக்கப்பட்டுவந்துள்ள ஒரு வர்க்கத்தினரின் வாழ்க்கைத்தரத்தை ஏனையதுறைகளில் உள்ளவர்களின் வாழ்க்கை நிலைகளுக்கு ஏற்ப மாற்றிஅமைப்பதற்கு தயக்கம் காட்டப்படுவதில் எதுவித நியாயமும் இல்லை. சோஷலிஸ சமுதாயம் ஒன்றைக் கட்டி எழுப்புவது பற்றி பெரிதாகப் பேசப்படும் இந்தக் காலத்தில் தோட்டத்துறையில் வாழும் ஏழைத் தொழிலாளர்கள் இனியும் புறக்கணிப்புக்குள் ளாக்கப்பட்டு வருவது சரியல்ல.

அண்மைக்காலம் வரையில் வேலைநாட்கள், சம்பள உயர்வு, வயதுவந்த பிள்ளைகளைப் பெயர்பதிதல், உணவுப் பற்றுக்குறை, பெண் தொழிலாளருக்கு சமசம்பளம் போன்ற பல்வேறு பிரச்னைகள் தோட்டத்துறையைப் பெரிதாக உலுக்கி வந்தன.

தோட்டங்களை அரசு கையேற்றபின்னர் இந்த நிலைமை வேறு ரூபம் எடுத்தது. பல தோட்டங்கள் கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதால் அப் பகுதியில் நிரந்தரமாக வாழ்ந்துவந்த தொழிலாளர்கள் புதிய பிரச்னைகளை எதிர்நோக்க நேர்ந்தது. இதன் விளைவாக அண்மையில் மலைநாட்டில் துரதிருஷ்டமான சில சம்பவங்களும் தலைதூக்க நேர்ந்தது. இந்த நிலைமையில் அரசாங்க தோட்ட கூட்டுத்தாபனம் உடனடியாக 75 ஆயிரம் தொழிலாளர்களுக்கு வேலை வழங்க முன்வந்திருப்பதாக வெளிவந்துள்ள செய்தி, ஓரளவுக்கு மகிழ்ச்சிக்குரியதே. தோட்டக்காணிப்பங்கீடுகளினுல் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இதனுல் விமோசனம் பிறக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

# "முத்தலைவர்களின் தமிழ்ஈழ கனவை நனவாக்குவோம்"

## கொள்கைவிளக்கக் கூட்டத்தில் வி. என்.

யாழ்ப்பாணம், வியா.

'இந்தநாட்டில் தமிழினம் வாழவேண்டுமானுல் அது தன்னைத் தான் ஆளும் இனமாக மாறவேண்டும். முப்பத்தைந்து லட்சம் தமிழர்வாழும் நமது ஈழநாட்டில் சுதந்திர தமிழ் ஈழம் மலரவேண்டும். இதுவே எமது மூதறிஞர் தந்தை செல்வா உட்பட அமரத்துவம் எய்திய முப்பெரும் தலைவர்களும் கண்ட கனவாகும். அதை நனவாக்குவதே தமிழர் கூட்டணியின் இலட்சியமாகும்.

இவ்வாறு கல்வயலில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் கொள்கைவிளக்கும் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி முன்னுள் எம். பி. திரு. வ.ந.நவரத்தினம் கூறினுர். திரு. ப. இராஜரத்தினம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

'எமது சகல வளர்ச்சிகளும் சிங்கள ஆட்சியின்கீழ் ஒழுங்காக நடைபெறமுடியாது. தரப்படுத்தல் என்றபோர்வையின்கீழ் எமது இனத்தை ஒதுக்கிவிடுவார்கள்.

1972ம் ஆண்டு மே மாதம் 22ந் திகதி அமுலாக்கப்பட்ட அரசியல்அமைப்பின்கீழ் இந்த நாட்டின் ஆட்சிமொழி சிங்களம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே நாம் நமது இனம், நமது மொழி, கலை, கலாச்சாரம் வாழ, வளர, ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக சுதந்திர தமிழ்ஈழம் ஒன்றினை அமைப்பதே சிறந்த வழியாகும், தமிழ் உரிமை பெறும் முயற்சியில் தமிழினம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும். பார்வையாளராக மட்டும்இருந்து விடக்கூடாது. பார்வையாளராக மட்டும் இருந்தால் எமது குழந்தைச்செல்வங்களின் எதிர்காலம் இருள்மயமாக மாறிவிடும் என்பதை நாம் யாரும் மறந்துவிடக்கூடாது'.

பிரம்மஸ்ரீ சிதம்பரநாத சர்மா பேசுகையில், 'நாம் சுதந்திர தமிழ் ஈழம் பெறுவதற்காக அறவழியில் நடாத்தும் அகிம்சைப் போராட்டத்திற்கு நமது வாக்குச்சீட்டுக்களே ஓர் ஆயுதமாக அமைகிறது' என்றுர்.

சட்டத்தரணி என். அருணசலம் பேசுகையில், 'நாம்சுதந்திர தமிழ் ஈழத்தைப்பெற முடியும். அதற்கு நாம் ஒன்றுபட்டு ஒரே அணியில் நின்று உழைக்கவேண்டும்' என்றுர்.

சாவகச்சேரி இளைஞர் பேரவைத் தலைவர் திரு.மு. பாலரத்தினம், திரு.ஆ. நடராசா உட்படப் பலர் பேசினர்.

(மட்டு-அ)

# "கல்விக்குத் தடை போட்டபின் கட்டிடங்கள் எதற்கு?"

## வட்டு கூட்டணி வேட்பாளர் கேள்வி

சுழிபுரம், புதன்

'கண்கெட்டபின்னர் சூரிய நமஸ்காரம் என்பதுபோல் தரப்படுத்தலைச் சரியென ஏற்று எமது தமிழ் மாணவர்களை மேற்கல்வி கற்கவிடாது நடுத்தெருவில் நிற்கவிட்ட பின்னர், பாடசாலைக்கட்டிடங்கள் கட்டி என்னபிரயோசனம். எமக்குக் கட்டிடம் அல்ல முக்கியம். தமிழ்மக்கள் இந்த நாட்டில் தன்மானத்துடன் சுதந்திரமாக வாழ்வதே முக்கியமாகும். இதை அடையத் தமிழர்விடுதலைக் கூட்டணி வேட்பாளர்களை எதிர்வரும் பொதுத்தேர்தலில் தெரிவு செய்ய வேண்டியது தமிழ்பேசும்மக்களின் கடமையாகும்.'

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர்விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. தா.திருநாவுக்கரசு, சுழிபுரம் சத்தியக்காடு சந்தைக்கு அருகாமையில் நடைபெற்ற அமரர் செல்வாவின் நினைவாஞ்சலிக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார். சுழிபுரம் கிழக்கு இளைஞர் பேரவையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டனர். திரு.வே.இராமநாதன் தலைமை வகித்தார். சிறை மீண்ட இளைஞர் த. சந்ததியார் பேசுகையில் தந்தை செல்வாவின் மறைவு தமிழ்பேசும் மக்களுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியுள்ளது. நாம் தந்தைக்குச் செய்யும் கடமை, தந்தை கண்ட கனவை நனவாக்குவதேயாகும். நாம் எத்தகைய தியாகத்தையும்செய்ய என்றும் தயாராக இருக்க வேண்டும்'' என்றுர்.

திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், ''தமிழ்பேசும் மக்களுக்கு ஒற்றுமைதான் இன்று முக்கியமாகும். ஒற்றுமை குலையக்கூடாது என்பதற்காகவே தான் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடச் சென்றுள்ளேன் என்றுர்.

ந. தவம், செ. முருகமூர்த்தி, க. தவராசா, செ. இரத்தினம், ந. ஜெமீந்தார், இ. கணேசகுரு உட்பட மற்றும் பலர் பேசினர். (அ)

### கட்டுப்பணத்தில் கடும் போட்டி

நெல்லியடி, புதன்

பருத்தித்துறைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. கே. துரைரத்தினத்தின் கட்டுப்பணத்தைச் செலுத்த அல்வாய், துன்னாலை, தாளையடி, இன்பருட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்துள்ளனர்.

சென்ற பல தேர்தல்களிலும் திரு. துரைரத்தினத்தின் கட்டுப்பணத்தைச் செலுத்திய இன்பருட்டி மக்களே இம்முறையும் இவரது தேர்தல் கட்டுப்பணத்தைச் செலுத்தும் சந்தர்ப்பத்தைப் பெறுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

### இப்பரீட்சை 8-ம் திகதி

யாழ்ப்பாணம், வியா.

வட இலங்கை, பாடசாலை 7, 8, 9-ம் வகுப்புகளுக்கான மாணவருக்கு நடாத்தப்படவிருந்த அரையாண்டுப் பரீட்சை பின்போடப் பட்டுள்ளன. இம்மாதம் 6-ந் திகதி தேர்தல் நியமனங்களுக்கான விண்ணப்பத் திகதியாகையால் 8-ந் திகதி இப்பரீட்சை நடைபெறும். (கெ-அ)

வேலணையில்

# சாரண அணித் தலைவர்கள் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், வியா.

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் தீவுப்பகுதிக் கிளையினரும் யாழ்ப்பாணப் பட்டினக் கிளையினரும் சேர்ந்து நடாத்திய சாரணர் அணித் தலைவர்கள் பயிற்சிமுகாம் வேலணை மத்தியமகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இரு கிளைச்சங்கப்பிரிவுகளிலுமுள்ள சாரணர்படைகளின் அணித்தலைவர்கள் பயிற்சி முகாமில் பங்குபற்றினுர்கள்.

பயிற்சியை மாவட்ட ஆணையாளர் திரு.சி.க. மூர்த்தியும் உப மாவட்ட ஆணையாளர்கள் திருவாளர்கள் கே, செல்வவிநாயகம், கே. சச்சிதானந்தம் ஆகியோரும், மாவட்ட சாரண ஆசிரியர் திரு. என். நல்லையாவும் நடாத்தினுர்கள். இம்முகாமுக்குரிய ஏற்பாடுகளைத் தீவுப்பகுதி உபமாவட்ட ஆணையாளர் திரு. செ. வரதலிங்கம்ஒழுங்குசெய்திருந்தார்.

முகாமில் பல்வேறு சாரண பயிற்சிகளும் பாசறைத் தீ வைபவமும் ஈற்றில் கிராமங்களுக்குச் சென்று அவதானிக்கும் பயிற்சியும் நடைபெற்றன. இம்முகாமை வேலணை மத்தியமகாவித்தியாலய அதிபர் திரு. செ. குணபாலசிங்கம் ஆரம்பித்துவைத்தார். (அ)

### சந்தக்கா விதை இல்லை

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிப் பகுதியில் இவ்வாண்டு மிளகாய் உற்பத்தி மழையாலும், நோயினுலும் பாதிக்கப்பட்டமையால், விரக்தி அடைந்த விவசாயிகள், குறுகியகால சந்தக்கா மிளகாயையாவது உற்பத்தி செய்வதற்கு உத்தேசித்து விவசாய இலாகாக்களிலும் விவசாய விசாலிப்பு நிலையங்களிலும் சந்தக்கா விதை கேட்டுச் சென்றுல் அங்குவிதை இல்லை என ஏமாற்றமடைந்துள்ளனராம்.

விவசாய இலாகா இதுவிஷயத்தில் கவனம் எடுத்து ஆவன செய்யுமா என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

### "கொள்கை மாறுதவர்"

பண்டத்தரிப்பு, புதன்

"கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழர் கூட்டணியின் பொருளாளராக இருந்து சிறப்பாகத் தமிழினத்திற்குத் தொண்டாற்றிவரும் திரு. திருநாவுக்கரசு ஆட்சியாளரினுல் அதற்காகப் பழிவாங்கப்பட்டு பல நஷ்டங்களை அடைந்தவர். இருந்தும் இலட்சியத்தில் கொள்கையில் மாறுபடாத அவரை எதிர்வரும்பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதிமக்கள் தங்கள் பிரதிநிதியாகத் தெரிவுசெய்வார்கள் என்பதில் ஐயமில்லை.'

இவ்வாறு பண்டத்தரிப்பு பிரதானவீதியில் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கிளைக்காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் திரு.அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. வில்லியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு, பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத் தலைவர் திரு.மு.நடராசா, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் ஆகியோரும் பேசினர். (அ)

### மின்விநியோகம் சீரடையும்

நெல்லியடி, புதன்

பருத்தித்துறை நகரசபைப் பொதுநூல் நிலையமும், மின்சார விநியோகமும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

பொது நூல்நிலைய விஸ்தரிப்பிற்கான கட்டிட வேலைகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. இவ்வேலைகள் ஆரம்பமாகும்போது இந்நூல்நிலையம் தற்காலிகமாக வேறோர் இடத்திற்குமாற்றப்படும்.

இந்நகர எல்லைக்குள் விஸ்தரிக்கப்படவுள்ள மின்சார விநியோகத்தின் பொருட்டு தும்பளையில் புதிதாக 'ட்ரான்ஸ்போமர்' ஒன்று நிறுவப்படுவதுடன், மந்திகைப்பகுதிக்கான மின்விநியோகம் இலங்கை மின்சாரப்பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதனுல் இப்பகுதியில் இதுவரைகாலமும் ஏற்பட்டுவந்த மின்சாரத் தடை இனிமேல் ஏற்படாதென பருத்தித்துறை நகரசபை நம்பிக்கை தெரிவிக்கிறது.

### அனலைதீவில் கூட்டணி பிரசாரம்

யாழ்ப்பாணம்,வியா.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதிக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்றுமாலை அனலைதீவில் நடைபெறவிருக்கிறது. இக் கூட்டம் ஊராட்சி மன்ற உறுப்பினர் திரு. எஸ். தயாபரராசா தலைமையில், அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் நடைபெறுகின்றது. (கெ-அ)

### விவசாயப்பயிற்சி

கிளிநொச்சி,புதன்

கிளிநொச்சிமேற்கு விவசாய விரிவாக்க உத்தியோகத்தர்களான திரு. வி. எஸ். நடராசா வி. சின்னத்தம்பி, திரு. சச்சிதானந்தன், திரு.முத்துத்தம்பி திரு. சபாநாதன் ஆகியோர் குறுகியகால கலப்புநெல் வேளாண்மை பற்றி பயிற்சி பெறுவதற்கு, அநுராதபுரம்-மகாஇலுப்பள்ளம, பயிற்சிநிலையத்திற்குச்சென்றுள்ளனர். (ஈ)

# விழிப்புலனிழந்தோருக்கு தொழிற்பயிற்சி நிலையம்

## முதலாண்டு விழாவில் யோசனை

யாழ்ப்பாணம், வியா.

''விழிப்புலனிழந்தோர்கல்வி மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதற்குப் பெற்றோரின் அசிரத்தையே காரணமாகும் என்று யாழ். விழிப்புலனிழந்தோர் பாடசாலை சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவில், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநில கல்வி அதிபதி திரு. கே. சிவநாதன் குறிப்பிட்டார்.

விழிப்புலனிழந்தோர் ஈடேற்றப் பாதையில் பெரும்பணிகள் காத்திருப்பதாகவும் அப்பணிகளை நிறைவு செய்வதற்கு சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும் என்றும் கூறினார்.

இச்சங்கம் கடந்த ஓராண்டில் பெரும் சாதனைகளை நிறைவேற்றியுள்ளனரென்றும் அவர் பாராட்டினார்.

தலைமையுரை யாற்றிய திரு. கு. நேசையா பேசுகையில், விழிப்புலனிழந்தோருக்கென தனியொரு பாடசாலையை நிறுவுவதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும், விழிப்புலனிழந்தோரின் நலன் கருதி கல்விப்பகுதியினர், அக்கறை செலுத்திவருவதும் பாராட்டக் கூடியது என்றார்.''

யாழ் சமூக சேவைப்பகுதி உத்தியோகஸ்தர், திரு. திருச்செல்வம் பேசுகையில் புலனிழந்தவர்கட்காக யாழ்ப்பாணத்தில்தொழிற்பயிற்சிநிலையத்தை அமைப்பதற்கு அரசின் முயற்சியை கருதாமல், ஒரு நிலையத்தை நாமே அமைக்க வேண்டும். இதற்கு தந்தை செல்வா நினைவாலயத்துக்கு கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை செலவிடலாமெனக் குறிப்பிட்டார்.

இவ்விழாவில், வணபிதா மேரி பஸ்டியன், செல்வி. சின்னத்தம்பி, திரு. சீ. தர்மராஜா ஆகியோர் உரையாற்றினர். விழாவில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (கெ)

## தமிழ் இளைஞர் பேரவை

வேலணை, புதன்

சரவணை தமிழ் இளைஞர் பேரவையின் கிளைக்கூட்டம் பண்டிதர் கா. பொ. இரத்தினம்தலைமையில்நடைபெற்ற போது பின்வருவோர்கள் நடப்புவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் சே. சிவஞானசேகரம், உபதலைவர்; இ. இராசரத்தினம், செயலாளர் க. பாலசிங்கம், உபசெயலாளர்: சோ. தனபாலசிங்கம், பொருளாளர்: நா. அருமைநாயகம். மற்றும் 12 பேர்கள் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## நீச்சல் பழகியவர் மூழ்கி மரணம்

பண்டத்தரிப்பு,புதன்.

குளத்தில் நீந்திப் பழக ஆசை கொண்ட 12 வயதுச் சிறுவன், மூச்சுத்திணறி மரணமடைந்த பரிதாபகரமான சம்பவம் வடலியடைப்பில் நடைபெற்றது.

வடலியடைப்பிலுள்ள குளத்துக்குப் பக்கத்திலுள்ள காணியில் புல்பிடுங்கிக் கொண்டிருந்த குமரேசு செல்லக்கிளி என்னும் இச்சிறுவன், நீந்திப் பழகுவதற்காக இக் குளத்தில் இறங்கியதாகவும் நீந்த முடியாது தண்ணீருக்குள் தத்தளித்ததாகவும் தூரத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவர்கள் ஓடிவருவதற்குள் உயிர் பிரிந்து விட்டதாகவும் மரண விசாரணையின் போது சாட்சியங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் நீரில் மூழ்கியதினால் ஏற்பட்ட மரணமென தீர்ப்பு வழங்கினார்.

## வடமராட்சிக்கிளை நிர்வாகசபை

நெல்லியடி, வியாழன்

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் வடமராட்சிக்கிளையின் இரண்டாவது வருடாந்தப்பொதுக்கூட்டம் பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பருத்தித்துறை நகரசபை பிரதம எழுதுநர் திரு. அ. வடிவேலு மீண்டும் இக்கிளையின் தலைவராகவும், தாய்ச்சங்கப் பிரதிநிதியாகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

துணைத்தலைவராக வ. சிவபாதசுந்தரமும், செயலாளராக ச. பரமேஸ்வரனும், பொருளாளராக சி. ஆலாலசுந்தரமும்மற்றும் ஆறுபேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## செல்வாவுக்கு அஞ்சலி

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சியை அடுத்துள்ள கனகபுரம் படித்தவாலிபர் திட்ட கிராமஅபிவிருத்திச் சங்கத்தினர் விசேட பொதுக்கூட்டம் கூடி, மறைந்த மூதறிஞர் செல்வாவின் ஆத்மா சாந்திஅடையப் பிரார்த்தனை நடத்தினர். அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தாருக்கு அனுதாபச்செய்தியும் அனுப்பிவைத்துள்ளனர்.

சங்கத்தலைவர் திரு. ஏ. பி. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இரங்கல்கூட்டத்தில் திரு. எஸ். கனகேந்திரம், எம். சீவரத்தினம், என். சோதிநாதன், வடலியூர் திரு. நாராயணன் ஆகியோர் இரங்கல் உரை நிகழ்த்தினர். (ஈ)

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் மூத்தவிநாயகர் சனசமூகநிலைய நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். தலைவர்: கு. நடராஜா, உபதலைவர்: செ. இராஜதுரை, செயலாளர்: தி. கணேசன், உபசெயலாளர்: கா. யோகரத்தினம், பொருளாளர்: ந. பரஞ்சோதி, கலை கலாச்சார செயலாளர்: நா. காசிவிஸ்வநாதன். விளையாட்டுக்காரியதரிசி: சி. வெள்ளியம்பலம், நிலையப் பொறுப்பாளர் சு. அமரசிங்கம். [illegible] [கா]

# வேலரும் மயிலரும்




மயிலர்: கோப்பரேசனிலைகள்ளு விலைப்படாமல் ஊத்துகினமாம்!

வேலர்: சாரயப்போத்தில் படலையாலை வீட்டுக்குள்ளை உருண்டு வாற காலம் கோப்பரேசன் பக்கம் ஆர் போகப்போறான்.

— சுந்தர்



மானிப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் திரு. சி. முதலியாரிடம் அவரது தேர்தல் கட்டுப்பணத்தை ஆதரவாளர் கொடுக்கும் போது எடுக்கப்பட்ட படம்.

## "புதிய சாதனையை அமிர் நாட்டுவார்"

பண்டத்தரிப்பு, புதன்

''காங்கேசன்துறை தொகுதியில் கூட்டணி வேட்பாளர் திரு. ஏ. அமிர்தலிங்கத்தை எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியின்றி ஏகமனதாகத் தங்கள் பிரதிநிதியாக தேசிய அரசுப்பேரவைக்கு அனுப்புவதற்கு காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் பெருமுயற்சி செய்துவருகின்றனர். போட்டி தவிர்க்க முடியாத பட்சத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தொகுதிகளில் ஆகக் கூடுதலான பெரும்பான்மை வாக்குகளினால் தெரிவுசெய்யப்பட்டு புதிய சாதனை நிலைநாட்டும் பிரதிநிதியாக திரு. அமிர்தலிங்கம் விளங்குவார் என்பதில் சந்தேகமில்லை''.

இவ்வாறு வட்டுக்கோட்டையில் புதியகூட்டணிக் காரியாலயத்தைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் வட்டுக்கோட்டைத் தொகுதிக் கூட்டணி வேட்பாளரும், தமிழர் விடுதலைக்கூட்டணி பொருளாளருமான திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார். திரு. க. செரக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் திரு. சபா நாராயணன் உட்படப் பலர் உரையாற்றினார்கள். (அ)

## விவசாயிகள் கழக நிர்வாகிகள்

கிளிநொச்சி, புதன்

இராமநாதபுரம் அண்ணா இளம் விவசாயிகள் கழக வருடாந்தக் கூட்டம் கழக மண்டபத்தில் நடைபெற்ற போது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கே. வன்னியசிங்கம், உபதலைவர் செல்வி எஸ். பாக்கியம், செயலாளர்: செல்வி ரி. ஜெயச்செல்வி, உபசெயலாளர்: க. செல்வராசா, பொருளாளர்: செல்வி க. மனோன்மணி, கணக்காளர் எஸ். துரைசிங்கம், என். இராசசேகரன். மற்றும் 10 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## 'கண்ணியம்மிக்க ஒரு தலைவன்'

நெல்லியடி, வியா.

'தமிழினத்தின் ஒற்றுமையை கடந்த காலங்களில் கட்டிக் காத்த பெருந்தலைவன் அமரர் செல்வநாயகம். அவர் தனது அரசியல் வாழ்வில் ஒருவரையும் கண்டிக்காமல், இம்சிக்காமல், பழிசொல்லாமல், கண்ணியமாக நடத்திய பெரியார். அம்மாபெரும் தலைவனின் இழப்பு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும்'

இவ்வாறு பருத்தித்துறை நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அமரர் செல்வநாயகத்தின் அனுதாபத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாதாந்தக் கூட்டம் சபை தலைவர் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்றது.

## அமைச்சரின் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், வியா

கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடவிருக்கும் தபால் தந்தித் தொலைபேசித் தொடர்புகள் அமைச்சரும், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சருமான திரு. செல்லையா குமாரசூரியரின் கட்டுப் பணத்தை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் கச்சேரியில் திரு. வை. இராஜசுந்தரம் கட்டினார்.

கிளிநொச்சித் தொகுதியில் போட்டியிடும் அமைச்சர் குமாரசூரியர் தேர்தற் பிரசாரத்தில் அக்கறையுடன் ஈடுபட்டுள்ளார்.

## புளியங்கூடல் அம்பாள் உற்சவம்

யாழ்ப்பாணம், வியா

ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீமகாமாரி அம்பாள் மகோற்சவம் இம்மாதம் 10-ம் திகதி வெள்ளியன்று ஆரம்பமாகிறது. 18-ம் திகதி ரதோற்சவமும், அடுத்தநாள் தீர்த்தோற்சவமும் நிகழும்.

உற்சவ நாட்களில் தினமும் இரவு 7-30 மணிதொடக்கம் 8-30 மணிவரை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் சொற்பொழிவு இடம் பெறும். (அ)

## மலைமீது ஏறி சாதனை!

புதுடில்லி, ஜூன் 1

பாரத இராணுவ மலையேறும் கோஷ்டி ஒன்று நேற்று அதிகாலை இந்தியாவின் அதி உயர்ந்த மலையில் ஏறி வெற்றி கண்டனர்.

8,535 அடி உயரமான கஞ்சன் ஜங்கா எனும் இம்மலை சிக்கிமுக்கு கிழக்கே உள்ளது.

இந்தியாவின் மிகவும் உயரமான இம்மலைச் சிகரம் உயரத்தில் உலகின் மூன்றாவது மலைச் சிகரமாக விளங்குகிறது.

பாரத இராணுவ வீரர்கள் இம்மலைக்கு ஏறிய பாதை மிகவும் கஷ்டமானதாக இருந்ததென்றும் எவரெஸ்டை விட கடினமானதென்றும் சமாச்சார் அறிவித்தது.

# கட்சி மாறுவதை தடைசெய்யச் சட்டம்!

புதுடில்லி, ஜூன். 1

லோகசபையின் அடுத்தகூட்டத்தொடர் ஆரம்பமாகும் போது புதிய சட்டங்கள் கொண்டுவருவது பற்றி கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று ஜனதாகட்சியின் தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

உயர்அதிகாரிகளின் ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள் பற்றி விசாரணை செய்ய கமிஷன் நியமிப்பது, கட்சிவிட்டு கட்சி மாறும் அபேட்சகர்களைத் தடைசெய்வது போன்ற சட்டங்களைக் கொண்டுவருவது பற்றியும் ஆராயப்படவிருக்கிறது என்று திரு. சந்திரசேகர் தெரிவித்தார்.

## ராஷ்டிரபதி தேர்தல்

புதிய ராஷ்டிரபதி நியமனம் பற்றி அவர் தெரிவிக்கையில், ராஷ்டிரபதிதேர்தல் விரைவில் நடைபெறும் என்றார்.

''நாட்டின் ராஷ்டிரபதிக்கு தடுமாற்றம் இருக்கக்கூடாது. துணிவும், நேர்மைத்திறனும் இருக்கவேண்டும். மாநிலங்களில் சட்டசபைத் தேர்தல்களை நடத்தும் விஷயத்தில் பதில் ராஷ்டிரபதி தயங்கித் தயங்கியே கையெழுத்திட்டார். இந்தத்தடுமாற்றம் ஒரு ராஷ்டிரபதிக்கு இருக்கக் கூடாது'' என்றும் திரு. சந்திரசேகர் கூறினார்.

# ஆட்குறைப்பு யோசனை: கடும் எதிர்ப்பு!

புதுடில்லி, ஜூன் 1

அரசு நிறுவனங்களில் ஆட்குறைக்கும் பிரதமரின் யோசனைக்கு மத்திய ஊழியர் மகாசம்மேளனம் கடுமையான எதிர்ப்புத்தெரிவித்துள்ளது.

அரசு ஊழியர்களை ஆட்குறைப்பு செய்தால் உற்பத்தி பாதிப்பு மட்டுமல்ல கடுமையான விளைவுகளும் ஏற்படும் என்று இச்சம்மேளனம் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

“கூட்டணி இயக்கத்தில் சேர்ந்து

# உழைக்க வேண்டியது தமிழ்பேசும்மக்கள்கடமை”

கு. நேசையா

அரியாலை, புதன்

“தமிழ்மக்கள் இந் நாட்டில் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழாமல் மற்றவர்களைப் போல சமஉரிமையுள்ளவர்களாக வாழவேண்டுமென்று போராடியவர்களில் அமரர் செல்வநாயகம் முதன்மைவாய்ந்தவராக விளங்கினார். தமிழ் மக்கள் மொழியுரிமை, நிலவுரிமை, அரசியல் உரிமை கொண்டவர்களாக சிங்கள மக்களோடு சம்மான அந்தஸ்துள்ளவர்களாக இந்நாட்டில் வாழவேண்டுமென்று விரும்பினார். 1947-ம் ஆண்டிலே அரசியலில் பிரவேசித்த இவர் கடந்த முப்பது ஆண்டுகளும் தான் கைக்கொண்ட கொள்கையில் சிறிதும் மாற்றமில்லாமல் அதன்வழி வாழ்ந்து வந்துள்ளார். 1972-ம் ஆண்டு புதிய அரசியல் சாசனம் அமைக்கப்பட்டபொழுது தமிழ் மக்களுக்குரிய அடிப்படை உரிமைகள் அதில் இடம்பெறவேண்டுமென்று இறுதிவரை முயற்சிசெய்தார். தமிழ்மக்களுக்கு சுயநிர்ணய உரிமை வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையை முன்வைத்து 1975-ம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினார். அடுத்த ஆண்டில் வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழவேண்டுமானால் அவர்கள் தமக்கென ‘தமிழ் ஈழம்’ ஒன்றை அமைத்துக்கொள்ளவேண்டுமென்று பிரகடனப்படுத்தினார்”

இவ்வாறு பல்கலைக்கழகமுன்னாள்விரிவுரையாளர் திரு. கே. நேசையா யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி உவில்லியம்ஸ் மண்டபத்தில் சமூக அறிவியல் கழகமும், தமிழ் மன்றமும் ஒன்றிணைந்து நடத்திய அமரர் செல்வநாயகத்தின் அஞ்சலிக் கூட்டத்தில் பேச்சையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. நேசையா தொடர்ந்து பேசுகையில் “உண்மையையும் அகிம்சையையும் கைக்கொண்டு வாழ்ந்த தந்தை செல்வா தமது இறுதிநாள் வரை தமிழன் பூரணவிடுதலை பெற்ற இனமாக வாழவேண்டுமென்ற குறிக்கோளுடன் வாழ்ந்தார். இந் நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்கள் எல்லோரையும் ஒன்றிணைந்து அவர் அமைத்த “தமிழர் விடுதலை முன்னணி” ஒரு கட்சியல்ல அது ஒரு விடுதலை இயக்கம். அந்த விடுதலை இயக்கத்தில் பங்குகொண்டு உழைக்கவேண்டியது தமிழ் பேசும் மக்களின் கடமையாகும். அவர் இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு ஆற்றிய பெருஞ் சேவையை நினைவு கூருமுகமாக அவரது இறுதிக் கிரியைகள் நடைபெற்ற இடத்தில் நினைவாலயம் ஒன்றை அமைக்கவும், அவரது 80 வருட சேவையை வெளிப்படுத்தும் வகையில் நூலொன்றை வெளியிடவும் அவரது பெயரில் வறிய மக்களுக்கு உதவ கல்விநினைவு நிதியொன்றையும்அமைக்கவும் முடிவு செய்துள்ளோம். இவைகளைச் செய்வதற்கு சுமார் 10 லட்சம் ரூபா தேவையாகும். இந் நிதிக்கு மாணவர்களாகிய நீங்களும் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

கூட்ட ஆரம்பத்தில் சமூக அறிவியல் கழகத்தலைவரும், தமிழ் மன்றத்தலைவரும் அமரர் செல்வநாயகத்தின் பிரதியைப் படத்திற்கு மலர்மாலை சூட்டி தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

## வி. பி. பேச்சு

திரு. வ. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:

“அரசியலில் எதிரணியில் நின்று பெரியாருடன் போராடியவன் நான். 1947-ம் ஆண்டில் அவர் தேர்தலில் போட்டியிட்ட பொழுது அவரை வீடு வீடாக அழைத்துச் சென்று அவருக்கு வாக்களிக்கும்படி கேட்டவன்நான். அவரது கொள்கை வழியில் வளர்ந்துவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சேர்ந்து நாம் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் பூரணத்துவத்தைப் பேணக்கூடியதான பிரதேச சுயாட்சியைப் பெறவேண்டுமென்று செயல்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ள இதே வேளையில் அவரது மரணம் பேரிழப்பாகும். 1952-ம் ஆண்டுவரை அவரை ஆதரித்துச் செயலாற்றினேன். நான் தமிழரசுக்கட்சியை நமது நட்புக் கட்சியாக மதித்து நடந்துவந்துள்ளேன். அமரர் செல்வநாயகத்தின் மேல் நான் அன்பும் மதிப்பும் கொண்டவனாக இருந்துவந்துள்ளேன் அவரை தேர்தலில் எதிர்த்துப் போட்டியிட்டாலும் நான் அவரை எதிரியாக மதிக்கவில்லை.

1956-ம் ஆண்டில் களனியில் நடைபெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் மகாநாட்டில் செய்யப்பட்ட தனிச்சிங்களச்சட்டத் தீர்மானத்தில் இந்நாட்டில் திருப்புமுனை ஏற்பட்டது. இதனை அடுத்து பதவிக்கு வந்த திரு. டபிள்யூ. ஆர் பண்டாரநாயக்கா அரசாங்கம் தனிச்சிங்களச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தது பண்டாரநாயக்கா - செல்லநாயகம் ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்மக்கள் இழந்த உரிமைகள் சிலவற்றைப் பெறக் கூடியவாய்ப்பு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் தோன்றலாயின. எனது கட்சி இவ்வொப்பந்தத்தை வரவேற்றதுடன் காடுமுழுவதும் இதனை ஆதரித்துக்கூட்டங்கள் நடாத்தியது. தனிச்சிங்களச் சட்டத்தை ஆரம்பத்தில் முழுக்க முழுக்க எதிர்த்த இடதுசாரி இயக்கங்கள் தமிழ்மக்கள் தமது உரிமைகளைப் படிப்படியாக இழந்தபோது வாழிவிருந்து விட்டன. அத்துடன் தாம் நின்று உழைத்த கொள்கைகளையும் படிப்படியாகக் கைவிட்டன.

“வடக்குக் கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைத்து தமிழர்களுக்கென சுயாட்சியொன்றை அமைக்க வேண்டுமென்பதே பெரியாரின் கொள்கையாக அமைந்திருந்தது. இதனை எனது கட்சி ஆரம்பகால முதல் ஆதரித்து வந்துள்ளது. ஆனால் சமீபகாலத்தில் தங்கள் கட்சி சிங்களமக்கள் மத்தியில் ஆதரவை இழந்து விடும் என்ற காரணத்தால் மௌனமாக இருக்கத் தொடங்கிவிட்டார்கள். நான் எனது கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்களுக்கும், ஏனைய முற்போக்குக் கட்சிகளின் தலைவர்களுக்கும் தமிழ் மக்களின் பிரச்சனைகள் பூரணமாகத்தீர்க்கப்பட வேண்டுமென்றும், பிரதேசக்கொள்கையொன்றே இதனைத் தீர்க்குமென்றும் கூறிவந்துள்ளேன். கட்சிகளின் போக்கினாலும், கட்சிகளின் மௌன நிலையினாலும் சிங்கள மக்கள் இன வெறியிலிருந்து விடுபடமுடியாத நிலை இன்று ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள மக்கள் அறியக் கூடியதாக, தம் கொள்கைகளை மக்கள் முன்வைக்காமல் கட்சித்தலைவர்கள் ஒன்றுகூடி ஒப்பந்தங்கள் செய்வதின் மூலம் நாட்டில் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது, தமிழ் மக்கள் இந்நாட்டின் ஒருதேசிய இனம். வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைந்து தமது சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கக் கூடிய நிலையில் “தமிழ் ஈழம்” என்ற பெயருடன் தமக்கென சுயாட்சி யொன்றை நிறுவவேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது. விரும்பினால் பிரிந்துபோகக்கூடிய உரிமையையும் அது கொண்டதாக அமைய வேண்டும்.

இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பூரண சம அந்தஸ்துள்ளவர்களாக வாழவேண்டும். அது சாத்தியப்படாத பட்சத்தில் தமக்கென ஒரு ஆட்சியை நிறுவி பிரிந்து போகவேண்டியதுதான், இதனை விடுத்து ஒப்பந்தங்கள் மூலம் உரிமைகளை வென்றெடுக்க முடியாது. பிரதேசம், மொழியுரிமை, என்பவற்றைக் கொண்ட சுயாட்சி பெற்ற தமிழ் ஈழம் ஒன்றை அமைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கடைப்பிடித்து தனது இறுதிநாள் வரை வாழ்ந்த பெரியாரின் நினைவாக நாம் எல்லோரும் ஒன்றிணைந்து அவரது நினைவை நிறைவு செய்ய முற்படவேண்டும்.”

---

# லண்டனிலிருந்து வந்து பருத்தித்துறைக் கடலில் மரணம்!

நெல்லியடி, புதன்

சுகவீன முற்றுள்ள சகோதரனைப் பார்ப்பதற்காக லண்டனிலிருந்து வந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடலில் குளிக்கப்போய் மரணமானார்.

அச்சுவேலி இடைக்காட்டைச் சேர்ந்த கந்தையா ஆறுமுகசாமி [44 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரம் விசாரணை நடத்தினார். பருத்தித்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

இவ் விசாரணையின் போது இறந்தவரின் சகோதரரான கந்தையா பாலசுப்பிரமணியம் இம்மரணம் குறித்துச் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

“இறந்த தனது சகோதரன் பட்டதாரியாகி கடந்த 59ம் ஆண்டு கணக்கியல் படிப்பதற்காக லண்டன்சென்று, அங்கேயே தொழில் தேடிக்கொண்டு அங்குள்ள வெள்ளைக்காரப் பெண்ணை மணந்திருந்தார். அவருக்கு இரு பிள்ளைகளுண்டு. தமது திருமணத்திற்குப் பின்னர் 75-ம் ஆண்டு தனது மனைவி,பிள்ளைகளுடன் விடுமுறையில் இங்கு வந்து பல இடங்களையும் பார்த்துச் சென்றார்.

அண்மையில் எனக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் நான் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வந்தேன். இதுகுறித்து எனது சகோதரனுக்குத் தபால் மூலம் அறிவித்தேன். நான்சில தினங்களில் பூரண குணமடைந்து பருத்தித்துறை முனையில்உள்ள எனது வீட்டில் தங்கியிருந்த வேளைகளில் திடீரென அவர் லண்டனிலிருந்து எனது வீட்டுக்கு வந்தார்.

எந்தவித அறிவித்தலுமின்றித் தனியே வீட்டுக்கு வந்தவர், எனக்கு ஏற்பட்டசுகவீனத்தைப் பார்க்க வந்ததாகச் சொல்லி எனக்கு ஏற்பட்ட சுகவீனம்பற்றி விசாரித்துவிட்டு வந்தநாள் முதல் மறுநாள் வரை வீட்டிலிருந்தவர் எவ்வித கவலையுமின்றி வழக்கம் போலவே இருந்தார். அவர் வீட்டுக்கு வந்த மூன்றுவது நாள் மாலை கடலில் குளிப்பதற்காக எனது மகனுடன் சென்றார். மாலையில் எனது மகன் மட்டும் வீட்டுக்கு வந்து சிறியதகப்பனார் வீட்டுக்கு வந்துவிட்டாரா என்று என்னிடம் விசாரித்தார். நான் இன்னமும் அவர் வரவில்லை என்றேன். சிறிய தகப்பனுருடன் கடலுக்குச் செல்லும் வழியில் தான் தோட்டத்துக்குச் சென்றதாகவும் அவர்மட்டும் தனியே குளிக்கச் சென்றதாகவும் அவர் சொன்னார்.

இதனையடுத்து எனது மகனும் நானுமாக இறந்தவரைத் தேடிப் பல இடங்களுக்குச் சென்று பார்த்துவிட்டு ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினோம். மறுநாள் காலையில் எனது சகோதரன் கடற்கரையில் இறந்துகிடப்பதாகத் தகவல் கிடைத்ததையடுத்து அங்கு போய்ப்பார்த்தபோது வெறும் உடம்புடன் சகோதரன இறந்து கிடந்ததைக் கண்டு அடையாளம் கண்டேன். கடலுக்கு குளிக்கப் போனவர் தற்செயலாக நீரில் மூழ்கி மரணமாயிருக்கலாம்எனநம்புகிறேன்.”

இறந்தவருடைய மனைவி மக்கள் இலண்டனில் வசிப்பதால் அவர் என்ன மனோநிலையில் இங்கு வந்தார் என்பது புரியாமலிருப்பதாகவும் இதனால் இம்மரணம் குறித்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கப்படுகிறதென, இம்மரணம் குறித்து வழங்கப்பட்ட தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

---

# சாவகச்சேரியில் இளைஞர் பேரவை எழுச்சி மாநாடு

யாழ்ப்பாணம்,வியா.

தமிழ்இளைஞர் பேரவையின் எழுச்சிமாநாட்டை யொட்டி இம்மாதம் 4-ம் திகதி மாலை பிரமாண்டமான சைக்கிள் ஊர்வலமொன்று சாவகச்சேரி சந்தை மைதானத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளது. இதற்கு திருவாளர்கள் மாவை சேனாதிராசா, வண்ணை ஆனந்தன், பொன் சத்தியசீலன், பாலரத்தினம், ஜீவராஜா, திசைவீரசிங்கம் ஆகியோர் தலைமை தாங்குவார்கள்.

இந்த தமிழ் இளைஞர் பேரவை எழுச்சி மாநாட்டையொட்டி, அன்றுகாலை தமிழ் இளைஞர்பேரவை விசேஷ மாநாடும் கவியரங்கும் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து 5-ம் திகதி மாலை நுணாவில்சந்தியிலிருந்து மாபெரும் ஊர்வலம் ஒன்று புறப்பட்டுச் சந்தை மைதானத்திற்கருகாமையில் உள்ள விசேஷ அரங்கை வந்தடையும். அங்கு மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெறும். (மட்டு-அ)

---

## தீப்பெட்டி தட்டுப்பாடு

கிளிநொச்சி, புதன்

கிளிநொச்சிப் பகுதியில் தீப்பெட்டிபெரும் தட்டுப்பாடாக உள்ளது. இப்பகுதி மக்கள் தீப்பெட்டி கிடைக்காமையால் பெரும் அவதிப்படுகின்றனர்.

---

# “புராண இதிகாசங்களே மனிதனுக்கு வழிகாட்டி”

யாழ்ப்பாணம்,வியா.

‘சமயம் என்பது ஒழுக்க நெறி. மனிதன் அறநெறியில் வாழ்ந்து மண்ணில் வாழ்வாங்கு வாழ வழிவகுப்பதே சமயத்தின் குறிக்கோளாகும். சமயநெறியில் நின்று, நெறியுடன் ஒழுகி ஆத்மீக வளர்ச்சியைப் பெறுவதற்கு மனிதனுக்கு வழிகாட்டியாகஅமைந்துள்ளது புராண இதிகாசங்களே. தலைசிறந்த புராணங்களில் முருகன் பெருமை உரைக்கும் கந்தப்புராணமும் ஒன்றாகும்.’

இவ்வாறு பௌராணிக வித்தகர் தெல்லியூர் பிரம்மஸ்ரீ வ. குகசர்மா, வேலவேலி மருதடி வீரகத்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராண விரிவுரை நிகழ்த்துகையில் கூறினார். ஆலய வருடாந்த மகோற்சவத்தை யொட்டி, பத்து தினங்களுக்கு பிரம்மஸ்ரீ குகசர்மா தொடர்ந்து கந்தப்புராண விரிவுரை நிகழ்த்திவருகிறார் சங்கீத பூஷணம் திரு.சி.விஜசித்தம்பி தலைமையில் இந்த விரிவுரை நிகழ்ந்து வருகிறது. அவர் தொடர்ந்து கூறியதாவது:-

‘சமய வாழ்வுக்கு இன்றியமையாதது கடவுட்கொள்கை. கடவுட்கொள்கைக்கு நிலைக்களன் உயிரும் உடலுமாகும். உடலை இயக்கிக் கூடிநின்று தானும் இயங்குவது உயிர். உடம்போடு கூடி உறையும் மக்களின் உயிருக்கு மனம் என்றொரு கருவியுண்டு. இக்கருவி உலகிலுள்ள பொருட்களை ஐம்பொறிகள் மூலம் பெற்றுத் தன்கண் ஒடுக்கிப் பின் பல்வேறு வகையில் வெளிக்காட்டும். இம்மனம் உலகில் வாழ்க்கை நடத்தஉதவும் ஒரு நுண்ணிய கருவி. மனதிலிருந்து முளைக்கும் எண்ணங்கள் உருவம்பெற உதவும் கருவி வாய். அவற்றைச் செயற்படுத்துவது உடம்பு. எனவே தொழில்கள் யாவும் மனம். இந்தமனத்தை அடக்கி நல்வழி செலுத்த நமது ஆலயங்களில் நல்ல உபந்நியாசங்கள் இடம் பெறவேண்டியது அவசியம்’ என்றார். திரு. அருள் வேலழகன் உட்படப் பலர் பேசினர். (மட்டு-நிருபர்)

---

## விளையாட்டுப் போட்டி

நெல்லியடி,செவ்வாய்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இம் மாதம் 4-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கழகமைதானத்தில் நடைபெறவுள்ளது. (அ)

---

## நியமனம்

யாழ்ப்பாணம், வியாழன்

புங்குடுதீவு எட்டாம் வட்டாரத்தைச்சேர்ந்த திரு. எஸ். எம். தனபாலன்கூட்டுறவுத் துறைப் பரிசோதகராக கூட்டுறவுத் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். (செ)

# 'தமிழ்ஈழம் அமைக்க நாம் ஏன் போராடுகின்றேம்?'

சங்கானே, புதன்

''தமிழர்கள் இந்த நாட்டிலே தமிழ் ஈழத்தைப் பெற்றுச் சுதந்திரமாக வாழவேண்டுமா? அல்லது ஒற்றையாட்சியின் கீழ் அடிமைப்பட்டு, உரிமையிழந்து வாழப்போகிறார்களா? என்பதற்கான விடையை இத்தேர்தல் மூலம் தமிழ்பேசும் மக்கள் உலகிற்குத் தெரிவிக்கவேண்டும்.''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் வட்டுக்கோட்டைத் தொகுதி வேட்பாளர் திரு. நா. திருநாவுக்கரசு நேற்று காலை சங்கானைச் சந்தைக்கருகாமையில் கூட்டணிக் கிளைக் காரியாலயத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: ''தேர்தலில் வெற்றி தோல்வி சகஜம். ஆனல் வெற்றிபெறுகிறர் என்பது முக்கியமல்ல, எந்த இலட்சியம் வெற்றிபெறுகிறதென்பதே முக்கியம். பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் கட்டித்தந்திருக்கலாம். அவை எமது வரிப்பணத்தில் இருந்து எமக்காகக் கட்டித் தரப்படவேண்டியவை. ஆனல் பாடசாலைகளைக் கட்டித்தந்துவிட்டுப் பல்கலைக்கழகக் கல்வி பெறமுடியாமல் தரப்படுத்தல் முறை மூலம் எமது எதிர்காலச் சந்ததியின் எதிர்காலத்தைப் பாழடிப்பது நியாயமாகுமா?

''தமிழ்மொழி மட்டுமே தெரிந்த ஒரு தமிழன் கதிர்காமத்திற்குச் செல்ல நேரும்பொழுது திசைமாருவில் ஒரு கஷ்டம் வரும்போது தன் நிலையை விளக்க அவன் என்ன செய்யமுடியும்?

''அதே வேளையில்ஒரு சிங்களவர் நயினதீவுக்கு வரும் பொழுது ஊர்காவற்றுறையில் ஒரு துன்பம் வரும் பொழுது சிங்களம் தவிரவேறு மொழி தெரியாத அவன்வேறு என்ன செய்யமுடியும்? சிங்களவர் தமிழும், தமிழர் சிங்களமும் கற்று சம அந்தஸ்துடன் வாழும் நிலையிருந்தால் பிரச்னைதீரும். அந்தநிலை வருமென்றுதான் இத்தனை காலமும் பாடுபட்டோம். அந்த நம்பிக்கை பொய்த்துவிட்டது. எனவேதான் சிங்களவர்களுக்கு என்ற சிங்கள நாடும் தமிழர்க்கென்ற ஓர் தமிழ்நாடும் இருக்கவேண்டும் என்ற தீர்க்கமான முடிவிற்குவந்தோம். எனவேதான் தமிழ்ஈழம் ஒன்றை அமைக்கப் போராடுகிறேம்''

சங்கானை ப.சபை முன்னள் தலைவரும் தற்போதைய உறுப்பினருமான திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது: ''நாம் யாருக்கு வாக்களிக்கிறேம் என்பது முக்கியமல்ல, எந்த இலட்சியத்திற்கு வாக்களிக்கிறேம் என்பதுதான் முக்கியம். யார் இங்கு வேட்பாளராக நிற்கிறர் என்பது பற்றி நாம்கவலைப்படத்தேவையில்லை தலைமைப்பீடம் எதைச் சொல்கிறதோ அதற்குக்கட்டுப்பட்டு ஒற்றுமையுடனும் கடமை உணர்ச்சியுடனும் செயல்படுவதே தொண்டர்களாகிய எமது தலையாய கடமை. தமிழர் கூட்டணி வேட்பாளராக வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிடும் திரு. திருநாவுக்கரசை மிகப் பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றிபெறச் செய்யவேண்டும்''

## 'அமிர்' பேச்சு

கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில், ''திரு. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைதொகுதியை சேர்ந்தவரென்றும் அவரது வெற்றி அரசியல் சாசனத்திற்கு வாக்களித்தவர்களை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அகில உலகிற்கும் உணர்த்துவதாக அமைய வேண்டும்என்றும் அதேநேரத்தில் உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளரும் மிகப்பெரும்பான்மையான வாக்குகளால் வெற்றிபெறவேண்டியது அவசியமென்றும் திரு. இராசலிங்கம் தோல்வியடையநேர்ந்தால் அது தமிழர் கூட்டணியின் தோல்விமட்டுமல்ல தமிழ் இனத்தின் விடுதலைநோக்கின் தோல்வியாகுமென்று கூறினர்.

''தேர்தல் என்றதும் இத்தனை நாட்களாக மூலையில் தூங்கிக்கொண்டு கிடந்தவர்களெல்லாம் தாங்களும் தமிழர் கூட்டணியினர்தான் என்று கூறி வேட்பாளர் நியமனத்திற்கு விண்ணப்பித்தனர். விண்ணப்பம் கேட்டவர்கள் எல்லோரையும் வேட்பாளராக நியமிப்பதாயிருந்தால் வீட்டுக்கு ஒரு தொகுதியை நாம் ஏற்படுத்த வேண்டும். கூட்டணியின் நியமனம் கிடைக்காத பலர் இன்று புதுப்புது கட்சிகளின் பேரில் போட்டியிட முன் வந்து பத்திரிகைகளில் அறிக்கைவிடுகிறர்கள், இதே நேரத்தில் பாராளுமன்ற பிரதிநிதியாக இருந்த பலருக்கு நாம் நியமனம்கொடுக்கவில்லை. இருந்தும் எமது தீர்ப்பை ஏற்று நியமனம் கிடைக்காதபோதும் இலட்சியத்திற்காக தொடர்ந்தும் பாடுபடுகிறர்கள். தனது தொகுதியை மனமுவந்து சிறுபான்மைத்தமிழர் ஒருவருக்கு விட்டுக்கொடுத்து அவரது வெற்றிக்காகப் பாடுபடும். திரு. ஜெயக்கொடி, திரு. சிவசிதம்பரம் போன்ற பெருந்தன்மையாளரைக்கொண்ட இயக்கம் தமிழருக்கு தேவையா அல்லது நியமனம் கிடைக்கவில்லையென்பதற்காக போட்டிக்கட்சியமைத்து புதிதாக தமிழருக்குச் சேவை செய்வோம் என்று பத்திரிகைகளில் அறிக்கை விடுவோர்கள் தேவையா?'' என்று கேட்ட திரு. அமிர்தலிங்கம இயக்கத்தின் வளர்ச்சிக்காகவும இனத்தின் நன்மைக்காகவும பாடுபட்டும நியமனம் கிடைக்காதுபோனபோதும் கூட தொடர்ந்தும் ஐக்கியமாக இயக்கத்தில் உழைக்கும் ஆ. விஸ்வநாதன், ஆலாலசுந்தரம், தங்கத்துரை போன்ற தியாகிகள் உள்ள இயக்கம் தேவையா என்பதை எம்மக்கள்சிந்திக்கவேண்டும்'' என்றார்.

## வன்செயல்கள் அதிகரிப்பு?

சங்கானை, புதன்

சங்கானை சண்டிலிப்பாய் போன்ற இடங்களில் தலைதூக்கியுள்ள வன்செயல்கள் காடைத்தனம் காரணமாக கடைகள் சேதத்திற்குள்ளாக்கப்பட்டும் வீதியில்செல்வோர் பயமுறுத்தல் தாக்குதலுக்காளாகியும் சந்தைக்குச் சாமான் வாங்கச்செல்வோர் பீதியுடனும் நடமாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சங்கானை சந்தைமைதானத்திற்கருகாமையில் உள்ள தேநீர்க்கடைஒன்றில்திடீரென உட்புகுந்தஒருவர்உரிமையாளரைப்பயமுறுத்தி அங்கிருந்த போத்தில்களையும் மற்றும் பொருட்களையும் தாக்கி சேதப்படுத்தினராம். இதுபற்றி கடை உரிமையாளர் தம்பு ஐயாத்துரை பொலிசில் புகார் செய்ததைத் தொடர்ந்து சங்கானையைச் சேர்ந்த க. இரத்தினம் என்பவரையும் அவருக்கு உடந்தையாக இருந்த மற்றும் ஓர் நபரையும் கைது செய்வதில் சங்கானை பொலிசார் முனைந்துள்ளனர்.

அடிக்கடி இதுபோன்ற வன்செயல்கள் அசம்பாவிதங்கள் நிகழ்வதுபற்றியும் இதனல் பாதசாரிகள் பள்ளி மாணவர்கள் படும் அவஸ்தை பற்றியும் உள்ளூர் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் பொலிஸ் மேலிடத்திற்கு புகார் செய்துள்ளதாக தெரியவருகிறது.

டெவன் தோட்டச் சம்பவம்:

## பாதிக்கப்பட்டவர்களுக்கு உடைகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், வியா

யாழ்வளாகத் தமிழ்மன்றத்தைச் சேர்ந்த ஐவர் கொண்ட குழு ஒன்று இன்று காலை மலையகம் சென்று அங்கு டெவன் தோட்டச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடை தானம் வழங்கவிருக்கிறது.

இவ்வுடைகளைத் தமிழ் மன்றத்தினர் யாழ்ப்பாணப் பகுதியில் வீடுவீடாகச் சென்று சேகரித்துள்ளனர்.

உடைதானமளிப்பதில் யாழ் மக்கள் அதிக ஆர்வம் காட்டியதாகவும் பலர் விலைஉயர்ந்த உடுப்புக்களை அன்பளிப்புச் செய்ததாகவும் மன்றத்தினர் தெரிவித்து நன்றி கூறிக்கொண்டனர்.

ஏற்கனவே யாழ். வளாக விஞ்ஞான மாணவர்ஒன்றியத்தைச் சேர்ந்த ஒன்றியத் தலைவர்கள் எ. யோ. ஜெயராஜா திரு. என். சிவபாலன், திரு. எம். ராஜரத்தினம் ஆகிய மூவர் குழு டெவன் தோட்டம் சென்று நிலைமைகளை நேரில் ஆராய்ந்து தெரிவித்த தகவல்களைத் தொடர்ந்து தமிழ்மன்றத்தினர் உடுப்புகள் சேகரிக்கும் சேவையில் ஈடுபட்டதாகவும், ஒன்றியம் திரட்டிய தகவல்கள் நூலுருவில் தற்போது வெளி வந்துள்ளதாகவும் தமிழ்மன்றத்தினர் தெரிவித்தனர்.

இன்று டெவன் தோட்டத்தில் உடைகள் அன்பளிப்புச் செய்யச் செல்லும் குழுவில் திருவாளர்கள் நா. தர்மராஜா ச. பேரின்பராஜா, ச. வி. இம்மனுவல் ரஹீம், அ. விமலதாசா ஆகியோர் இடம்பெறுவர். (அ)


வெஸ்லி [மானிப்பாய்] தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30 சிவாஜி-சரோஜாதேவி இருவர் உள்ளம்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை) தினச 2-30, 6-30, 9-45 சனி, ஞாயிறு 10-30 ஜெய்சங்கர் - லக்ஷ்மி பூவா தலையா

வெலிங்டன் [யாழ். நகர்] ரஞ்சன் நடித்த தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள் நீலமலைத்திருடன்

லிடோ போன்: 7693 [யாழ். நகர்] டி.எம். சௌந்தரராஜன் நடித்த தினசரி 10-30, 2-30, 6-30, 9-15. அருணகிரிநாதர்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் முத்துராமன் – சுந்தரராஜன் பாரதி நடித்த தெய்வச்செயல்

10-6-77 முதல் சிவாஜி கணேசனின் வைர நெஞ்சம்

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15 & 9.45
RUSSIAN ROULETTE
Thrilling - Exciting - Demanding
(சில நாட்களுக்கு மட்டும்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி கணேசன், உஷா நந்தினி, (இருவேடங்களில்) சௌகார் ஜானகி மனிதனும் தெய்வமாகலாம் (ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம் மனோகரா (யாழ்ப்பாணம்) எம்.ஜி.ஆர் – ராதாசலுஜா வீரப்பா - நிர்மலா தினசரி 4 காட்சிகள் நடித்த இதயக்கனி (ஈஸ்ட்மன்கலர்)

REGAL (JAFFNA) Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
3-rd CROWDED WEEK
ALAN PRICE
ALFIE DARLING
(Color-adults only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்
Next Attraction
THE TAMARIND SEED (Color)

ராணி (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். – லதா (இருவேடங்கள்) நடித்த தினசரி 4 காட்சிகள் நாளை நமதே (ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ் (சுன்னுகம்) தினசரி 6-30, 9-30 சனி ஞாயிறு 2-30 விஜயகுமார்-சுஜாதா அவள் ஒரு தொடர்கதை

"திருவருள்" புரியும் பக்திரசமான 4-வது வாரம்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180 தினசரி 4 காட்சிகள் ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார் நாகேஷ், சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

ஈழநாடு
The EELANADU

கொழும்பு, புதன்

நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படு தினத்தில் நடந்து கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி தேர்தல் ஆணையாளர் திரு. ஈ. பீலிக்ஸ் டயஸ் அபேயசிங்கா, இன்று காலை தேர்தல் அதிகாரிகளுக்கு விளக்கினுர்.

நாற்பது உயர்தர தேர்தல்

## தேர்தல் ஆணையாளரை அதிகாரிகள் சந்தித்தனர்

அதிகாரிகள் இன்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்தனர்.

இந்த அதிகாரிகள் அடுத்த ஓரிரு தினங்களில் நாட்டிலுள்ள பல கச்சேரிகளுக்கும், செயலகங்களுக்கும் சென்று மற்றைய தேர்தல் அதிகாரிகளுக்கு நிலைமையைத் தெளிவாக விளக்குவார்கள்.

நியமனம் பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதி இம்மாதம் 6-ம் திகதியாகும்.

# டெவன் தோட்டத்தில் காடையர் நடத்திய அட்டூழியம்;

## யாழ்ப்பாண வளாக மாணவர் குழு அறிக்கை

புஸல்லாவ பகுதியிலுள்ள டெல்டா தோட்டத்தில் இடம்பெற்ற கொள்ளை, தீவைப்புசம்பவங்கள் வகுப்புவாத அடிப்படையில் நடைபெற்றுள்ளன. அப்பகுதிப் பொலிசார் இச்சம்பவம் குறித்து அசமந்தமான நடைமுறையைக் கையாண்டிருக்கிறு ் ள், என்று யாழ். வளாக மாணவர்குழுவினர்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். அப்பகுதியில் இடம்பெற்றுள்ள சம்பவங்கள் குறித்து நேரில் விசாரித்து அறிந்து வந்துள்ள இக்குழுவினர். தோட்டப்பகுதி மக்கள் அனுபவித்துள்ள கொடுமைகளை கண்ணீர் சிந்தும் வகையில் தமது அறிக்கையில் வர்ணித்துள்ளனர்.

புசல்லாவ, வடக்கு டெல்டா தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற தீவைப்பு, கொள்ளையடிப்பு சம்பவங்கள் தொடர்பாக நேரில் விசாரணை நடத்தி உண்மைகளைக் கண்டறிவதற்காக இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாக விஞ்ஞான மாணவர் சங்கம் ஒரு குழுவை தோட்டப்பகுதிக்கு அனுப்பியிருந்தது. அக்குழுவில் திருவாளர்கள் ஈ. ஜே. ஜெயராஜா (சங்கத் தலைவர்) என். சிவபாலன், எம். ராஜரத்தினம் ஆகியோர் அங்கம் வகித்தனர். அவர்கள் நேரில் பார்த்து கேட்டு அறிந்த விஷயங்களை ஓர் அறிக்கையாகச் சமர்ப்பித்துள்ளனர். அவ்வறிக்கையில் பின்வரும் விபரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன;-

வடக்கு டெல்டா தோட்டம் கம்பளை தொகுதியில் புஸ்ஸல்லாவையிலிருந்து மைல் தொலைவில் இருக்கிறது. மே மாதம் 17-ம் திகதி காலை சுமார் 10-30 மணிக்கு 300 பேர் அத்தோட்டத்துக்கு படைஎடுத்து அப்பாவிகளான ஏழைத் தொழிலாளர்களின் உடமைகளைக் கொள்ளையடித்துக் குடியிருப்பு லயன்களுக்கு தீவைத்திருக்கிருர்கள்.

35 லயன்களில் 17ல் கொள்ளையடிக்கப்பட்டது. 7 முற்ருக எரிந்து சாம்பலாக்கப்பட்டது, 9 பகுதியாக எரிக்கப்பட்டது. தோட்ட உத்தியோகத்தர் குடியிருப்புகளும் கொள்ளையடிக்கப்பட்டன. இந்தத் தாக்குதலால் சுமார் 150 குடும்பங்கள் பாதிக்கப்பட்டது. சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

### நேரில் விசாரித்தோம்

மாணவர் சங்கக்குழு மே 22, 23 திகதிகளில் அத்தோட்டத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட தோட்டங்களுக்குச் சென்று விசாரணை நடத்தியது.

குறித்த தினத்தில் நான்கு கூட்டுறவு லொறிகளிலும் சில பொதுவேலைப்பகுதி ஜீப்களிலும் சுமார் முன்னூறு பேர் வரை இறங்கினுர்கள், துப்பாக்கி, கைக்குண்டுகள், கத்திகள், இரும்புத் துண்டுகள், பெட்ரோல் தெளிக்கும் கருவிகள், கோடரிகள் போன்ற பயங்கர ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடித்தனர்.

வேலைநாளாக இருந்தபடியால், வீடுகளில் நோயாளிகள், வயோதிபர்கள், குழந்தைகள் ஆகியோரே இருந்தனர். கூச்சல் கேட்டு வேலைத்தலங்களில் இருந்தவர்கள் ஓடி வந்தனர் ஆயுதங்களால் தாக்கப்பட்டதால் அவர்கள் திருப்பிச் சென்று தேயிலைப் புதர்களில் பதுங்கிக்கொண்டனர்.

நகைகளும், பொருட்களும் மனிதாபிமானமற்ற முறையில் கொள்ளையடிக்கப்பட்டன, முதியவர்கள் இரும்புகளால் தாக்கப்பட்டனர். குழந்தைகளை பணயமாக வைத்துக்கொண்டு நகைகளை அபகரித்தனர்.

பி. எஸ். நல்லம்மா என்ற பெண்மணி இரும்பால் தாக்கப்பட்டதுடன் ஒரு காதிலிருந்த நகையைக் காதோடு பிய்த்து எடுத்தனர், பயத்தில் மற்றக் காதிலிருந்த நகைகளைக் கழற்றி அவர் கொடுத்துள்ளார். அவரது வயோதிப தந்தை இரும்பால் தாக்கப்பட்டு மூக்கு வாளால்வெட்டப்பட்டுள்ளது. இடத்துக்குவிரைந்த சுப்பையா என்பவர் கோடரியினுல் தலையில்தாக்கப்பட்டுள்ளார். வேறு ஏழுபேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

### மூன்று குழுவாக இயங்கினர்

கொள்ளைக் காரர்கள் மூன்று குழுவாக இருந்து இதனை நடத்தியுள்ளனர். ஒரு குழு தாக்குதலையும் கொள்ளையையும் நடத்தியது மற்றது, கொள்ளையடிந்தவற்றை வாகனங்களுக்கு கொண்டு சென்றது. மூன்ருவது குழு லயன்களுக்குத் தீ மூட்டியிருக்கிறது. இவர்கள் இனவாத கோஷங்களையும் கோஷித்திருக்கிருர்கள்.

தொழிலாளர்களின் பிரஜாவுரிமை, சான்றிதழ்கள் போன்ற தஸ்தாவேஜுகள் எல்லாம் எரிக்கப்பட்டுவிட்டன.

### கோவில் நாசம்

அம்மன் கோவிலில் சிலையுடன் பெறுமதியான நகைகளும் திருடப்பட்டுள்ளன. மற்றும் பொருட்கள் நொறுக்கப்பட்டுள்ளன. சென். செபஸ்தியார் ஆலயத்தில் சிலைகள் யாவும் அடித்து உடைக்கப்பட்டுள்ளன.

தோட்ட உத்தியோகஸ்தர்களினதும் தோட்ட ஆசிரியரினதும்உடைமைகள்கொள்ளையடிக்கப்பட்டுள்ளன,

### காரணம்

இந்த சம்பவம் நடந்தமைக்கான காரணத்தையும் மாணவர் குழு விளக்கியுள்ளது. தோட்டக்காணிகள் கிராமவாசிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது பற்றியும், தோட்டங்களில் பலகாலம் வாழ்ந்து வரும் இந்தியவம்சாவழியினர் புறக்கணிக்கப்பட்டது குறித்தும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை சோஷலிஸ குடியரசின் பிரஜைகளான தங்களுக்கும்காணி வேண்டும் என தோட்டத் தொழிலாளர்கள் குரல் எழுப்பியதை அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. இதன் காரணமாக டெவன் தோட்டத்தில் சிவனு லெட்சுமணன் என்ற இளம் தொழிலாளி பொலிஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானதையும் அதே தினத்தில் சப்முவாரி தோட்டத்தில் பட்டப்பகலில் கொள்ளைகள் நடைபெற்றதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

## கூட்டணிக்கு ஆதரவு அளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா

எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குத் தமது முழுஆதரவையும் வழங்குவதென்று இலங்கை ஆசிரியர்சேவைச்சங்கம் பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மக்களின்பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஒரு முகப்பட்ட இயக்கமான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கே எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஆதரவு நல்கவேண்டுமென்றும் குறிப்பாக மலைநாட்டுத்தமிழர் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவிளையும் இயக்கத்திற்கேஆதரவளிக்கவேண்டுமென்றும் சங்க உறுப்பினர்களைக்கோரி சங்கத்தின் செயலாளர் திரு. அ. சுப்பிரமணியம்இந்தஅறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இச்சங்கம் தோட்டப்பாடசாலைகளிலிருந்து அரசினர் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களின் சங்கமென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

தேர்தல் காலத்தில்

## மதுபான விற்பனை தடைசெய்ய வேண்டும்

### பிரதமருக்குக் கோரிக்கை

கொழும்பு, புதன்

தேர்தல் நடைபெறும் காலத்தில் தவறணைகளை மூடும்படியும் குடி வகைகளை விற்பனை செய்யும் கடைகளும் மூடப்பட வேண்டும் என்றும் சர்வதேச கலாச்சார தகவல் சேவைபிரதமர் திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்காவை கேட்டுள்ளது.

பொதுத்தேர்தல் நடைபெறும் தினமான ஜுலை 17 ம் திகதி முதல் 23-ம் திகதிவரை இந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பிரதமரைக் கேட்டுள்ளது.

மதுபான விற்பனைத் தடையை அமுலுக்குக் கொண்டுவருவதன் மூலம் தேர்தல் சுமுகமாக நடைபெற வாய்ப்பு உண்டு என்றும், இந்த விஷயத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைப்பு அளிக்கும் என்னு எதிர்பார்ப்பதாகவும்இக்கலாச்சாரசபை பிரதமரை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

## ஈழநாடு ஊர்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த கூட்டத்தில் உப-குழுவினுல் தேர்தல் விஞ்ஞாபனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 10 தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது. காங்கேசன்துறை முல்லைத்தீவு, கிளிநொச்சி, பருத்தித்துறை, அபேட்சகர்கள் பற்றி இம்மாதம் 4-ம் தேதி மாலை ஜி. ஜி. காங்கிரஸ் காரியாலயத்தில் கூடி முடிவு செய்வதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

''ஜி. ஜி. காங்கிரஸ்'' என்ற பெயரில் புதிய கட்சி ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும். ஜி. ஜி. யின் படத்துடன் நான்கு வர்ணக்கொடி பாவிக்கப்படும் எனவும் பத்து தொகுதிகளில் இது போட்டியிடுமெனவும் 11-5-77 'ஈழநாடு' முன்பக்கத் தலைப்புச் செய்தி பிரத்தியேகமாக வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-உ)

## சாகும் வரை—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விரதத்தை நேற்றுமுன்தினமிரவு கைவிட்டனர்.

இம்மாணவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கல்லூரியின் நிர்வாக அதிகாரியான டாக்டர் அ. கெங்காதரன் தாம் வகித்துவந்த நிர்வாக அதிகாரி பதவியையும், பதிவாளர் பதவியையும் ராஜினுமா செய்தார். இவர் தமது பதவிகளிலிருந்து விலகவேண்டுமெனக் கோரியே ஏழு மாணவர்களும் சாகும் வரை உண்ணு விரதத்தை மேற்கொண்டனர்.

உண்ணுவிரதமிருந்த ஏழு மாணவர்களில் ஒருவரான அமிர்தலிங்கம் என்பவர்நேற்று முன்தினம் பகல் மயக்கமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரிந்ததே. உண்ணுவிரதத்துடன் மாணவர்கள் வகுப்புகளையும் விரிவுரைகளையும் பகிஷ்கரித்து வந்தனர். இதற்கு கல்லூரிப் பழைய மாணவர்களும் பொது மக்களும் ஆதரவு வழங்கிவந்தனர். (உ-அ)

## களபந்து—

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

ஞல் இதனைச் செய்வது அசாத்தியம் என்று அரசாங்கம் கூறியிருக்கிறது.

### பின்வாங்கப் போவதில்லை

சரிவர வேலை செய்வதற்கு ரயில்வே ஊழியர்கள் உடன் வரவேண்டுமென்றும் எக்கட்டத்திலும் அரசாங்கம் சட்டத்தையும் ஒழுங்கையும் கைவிட முடியாது என்றும் அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

ரயில்வே ஊழியரின் 22 கோரிக்கைகளில் இரண்டான 75 ரூபாவை சம்பளத்தில் அதிகரித்தால் 30 கோடி ரூபா அரசாங்கத்திற்குத் தேவையென்றும் தாதச்சம்பளம் குறைந்த பட்சம் 250 ரூபாவாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதானுல் ஆண்டொன்றுக்கு மேலும் 20 கோடி ரூபா தேவையென்றும் அரசாங்கம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

### அரசாங்கம் கவலை

ரயில்வே ஊழியரின் இந்நடவடிக்கையால் பொசன் பண்டிகை யாத்திரிகரும் மடு யாத்திரிகளும் பாதிப்படைந்துள்ளனர் என்றும் ரயில்வே சேவை பாதிப்புற்றதினுல் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்களுக்கு குறித்து அரசாங்கம் கவலை தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளது. (உ)

## மரண அறிவித்தல்

### இளையாச்சி இராஜா உடுப்பிட்டி

காலஞ்சென்ற இராஜாவின் அன்பு மனைவியும், திருமதி சொர்ணபூபதி சின்னையா (ஆசிரியை மங்கயர்க்கரசி வித்தியாசாலை, நல்லூர்), திருமதி சுந்தரபாஸ்கரி செல்வத்துரை (விரிவுரையாளர் உப-அதிபர், அரசினர் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத்தாயாரும், க. சின்னையா (அதிபர் பாரதி வித்தியாசாலை), த. செல்வத்துரை (சட்டத்தரணி), ஆகியோரின் மாமியாரும், பகிரதன், பகீரதி (பல்கலைக்கழகம், பேராதனை), ராகவன், துஷ்யந்தன் (இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாட்டியுமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று 2-6-77 வியாழக்கிழமை பகல் 12 மணியளவில் உடுப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 6361

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவிதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜுன் மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka.